# திராவிட நாடு

மலர் 6 | 26—10—47 | இதழ் 22


## பாரதியார் அம்மானை

[ கா. அப்பாதுரை M. A., L. T., ]

—:(0):—

'பாட்டுக் கொருபுலவன் பாரதி' என்பார்' அவன்தான்
பாரறியச் சாற்றியசொல் பகர்ப்பதேன்னோ அம்மானை?
பாரறியச் சாற்றியசொல் பகுத்தறிவுத் தீயெழுப்பப்
பதை பதைத்த பதகர்அவர் பகைச்சூழ்ச்சி காணேடி!

'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்று
பார்ப்பான் அவனுரைத்த பரிசென்னோ அம்மானை?
பார்ப்பான் அவனுரைத்த பரிசு, தமிழ்மகனுய்ப்
பார்ப்பான்தன் பண்புகண்டு பதைத்துரைத்தான் காணேடீ!

பாரதியார் தம்புகழைப் பாடுவோர் அவர்கண்ட
பாரதிதாசன் புகழுக் கோதுங்குவதேன் அம்மானை?
பாரதிதா சன்புகழுக் கோதுங்குபவர் தாம் அன்று
பாரதியார் தம்புகழ்க்கும் ஒதுங்கினவர் காணேடீ!

வாழ்ந்தஅக் காலத்தில் வதைத்திட்டார் அவர்தாமே
சூழ்ந்து புகழ்பாடும் சூழ்ச்சியென்னே, அம்மானை?
சூழ்ந்து புகழ்பாடும் சூழ்ச்சிசெய் யாவிடிலோ
வீழ்ந்த புகழ்த்தமிழர் விளக்காவான் காணேடி!

# பூஜாமனோபாவம் கூடாது

நாட்டை மீட்கும் நற்பணியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். இப்போது இங்கே இரண்டே கட்சிகள் தான் உண்டு; ஒன்று விடுதலைப்போர் புரியும் கட்சி, மற்றொன்று ஏகாதிபத்யம். எனவே, வேறு கட்சிகள் இருக்கக்கூடாது.

நாடு விடுதலை பெற்றான பிறகு, நாட்டை ஆளும் நேரத்திலே கட்சிகள் இருக்கலாம்; போராட்டத்தின் போது கூடாது, என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறிவந்தனர். இன்றோ! நாட்டுக்கு விடுதலை கிடைத்து விட்டது. ஆனால், காங்கிரசாருக்கு, வேறு கட்சியே இருக்கக்கூடாது, எதிர்ப்பின்றி, ஏகபோகமாகத், தாங்களே நாடாளவேண்டும், நிர்வாகம் எவ்வளவு கேடுள்ளதாயினும், யாரும் எதிர்த்திடக் கூடாது, என்ற எண்ணம் பலமாக ஏற்பட்டிருக்கிறது.

வெற்றிக் களிப்பே, இந்த விபரீத எண்ணத்துக்கு முக்கிய காரணம்; ஆனால் மூலகாரணம் வேறு இருக்கிறது.

என்ன தவறு செய்தாலும், சகித்துக்கொண்டு, தவறுகளை வெளியே எடுத்துச்சொல்லவும் யாருமே இல்லை என்றால் மட்டுமே, தங்களால் ஆட்சியை நடத்த முடியும்; குறைகண்டு பிடிக்க பலருக்கோ சிலருக்கோ, வாய்ப்பிருந்தால், தமது 'பிடி' தளர்ந்து விடும், என்ற அச்சம் அந்த மூலகாரணம்.

இது, குடி அரசுக் கோட்பாட்டுக்குக் கேடுவிளைவிக்கக் கூடியது.

அறிஞர், டாக்டர் கிருஷ்ணலால் சீதரணி, இந்தப் போக்குக்கூடாது, என்று தக்க காரணத்தோடு விளக்கியுள்ளார்.

புதிய நிலை நாடடுக்குப் பிறந்து விட்டது; இப்போது பழைய 'பூஜா மனோபாவம்' நீடிக்குமானால், ஜனநாயகம் வளராது; என்கிறார். அவருடைய கருத்துரை கீழே வெளியிடப்பட்டிருக்கிறது.

## புதிய கட்சிகள் வேண்டும்

"சுதந்திரம்அடைந்திருக்கும்இந்த நேரத்தில் நமக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் தேவைப்படுகின்றன. எங்கு ஒரேகட்சி ஆதிக்கம் செலுத்துகிறதோ அங்கு ஜனநாயகத்திற்கு உறைவிடம் சவக்குழி தான. இது ஒரு மகத்தான சோதனையாயிருக்கும். ஏனெனில் நாம் நடத்திவந்துள்ள ஒரு நீண்ட,கடுமையானபோராட்டத்தின் போக்கில்நாம் காங்கிரசைத் தவிரமற்றச்சகலகட்சிகளிடத்தும் அவநம்பிக்கை கொள்ளக் கற்று வந்திருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் ஒன்றினிடத்தில் மட்டும் நாம் கொண்ட பக்திக்குக் காரணம், அது(காங்கிரஸ்)இன்றுவரைஒருகட்சியாக இராமல் ஒரு இயக்கமாக இருந்து வந்ததுதான் என்பதைநாம் உணர வேண்டும். அது ஒரு பொது ஜன முன்னணியாக விளங்கிற்று. அதன் ஆதரவில் பல்வேறு சிந்தனைப் போக்குகள் ஒன்று பட்டு அந்நிய அதிகாரத்திற் கெதிராக ஒருபொது லக்ஷியத்தை உருவாக்கின. அந்த இயக்கம், இந்தியாவை அந்நியஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் தனது பணியை இப்போது நிறைவேற்றி வைத்துவிட்டது.

சுதந்திரமெய்திபிருக்கும் இத்தருணத்தில் காங்கிரஸ் ஒரு கட்சியாக மாறிவிடுகிறது. இபக்கம் என்ற அதன் உருவம் மறைந்துவிடுகிறது. அந்த நிலைமையானது பல்வேறு அரசியல், பொருளாதாரத் திட்டங்களையுடைய மற்றக்கட்சிகள் ஸ்தாபிக்கப் படவேண்டியதை அவசியமாக்குகிறது.

இந்தப்புதிய கட்சிகளில்சில, காங்கிரசிற்குள்ளிருந்தே எழும். அந்தக் கட்சிகள், காங்கிரஸிற்கு ஒருபோதும் தங்களின் தளராத விசுவாசத்தை அளித்திராத நபர்களையும் சேர்த்துக்கொள்ளும். காங்கிரஸ் வலது சாரியாகவும், இடது சாரியாகவும்பிரிந்துவிடுமென்று தோன்றுகிறது. எனினும் அதுவே கொஞ்சக் காலம் வரை ஒரு இடைக்கட்சியாக ஆதிக்கம் வகித்து வரும்.

## பத்திரிகை சுதந்திரம்

சுதந்திரமடைந்திருக்கும் இந்த நேரத்தில்நமக்குச் சுதந்திரம் பெற்ற பத்திரிகைகள் தேவை. இப்போது இது ஒரு தர்ம சங்கடமான பிரச்னையாயிருக்கிறது, அந்நிய அடக்குமுறை ஒழிக்கப்பட்ட அந்த நிமிடமே நமது பத்திரிகைகள்தாமாகச் சுதந்திரமடைந்து விடுமென்று சில ஜனங்கள்நினைப்பார்கள். ஆனால்அன்னிய ஆட்சியில் அவை சுதந்திரமாக நடந்து கொள்ளலாம். நமது சொந்த ஆட்சியில் அவ்வாறு நடந்து கொள்வதுதான் கஷ்டம். ஏகாதிபத்தியவாதிகளுக் கெதிரான தங்களுடைய போராட்டத்தில் பல்வேறு கொள்கைகளோடு இறங்கிய நமது வீரர்களைப் போற்றி, ஆதரவு நல்கி, நமது பத்திரிகைகள் தேசத்திற்கு அவை ஆற்றவேண்டிய பணிகளைச் செய்தன. அது ஒருபழக்கமாக மாறியது. பழக்கங்கள்மாறுவதுதுர்லபம். நமது பத்திரிகைகள் தாமாகவே நமது வீரர்களின் விளம்பர ஸ்தாபனங்களாக இருந்து வரத்தொடங்கினால், அவை தத்தம் ஜனநாயகக் கடமைகளைச் செய்யத் தவறி விடும். யுத்த காலத்தில் குற்றங் குறைகள்

(5-ம் பக்கம் பார்க்க)

---

20-ம் பக்கத் தொடர்ச்சி

பெரியார் சரேலென்று எழுந்து பணிவுடன், "ஏ முழுமுதற் கடவுளே! இம்மன்னனைக்கொன்றுவிடு" என்று வேண்டினார்.

கொடுங்கோலன் கடுங் கோபமடைந்து "என் நன்மைக்காக உன்னைப் பிரார்த்திக்கச் சொன்னால் நீ என் மரணத்தை வேண்டுகிறாயே? உன்னைச் சிறையிலிடுகிறேன்" என்றான்.

"உன் நன்மையைக் கோரியே இப்பிரார்த்தனை செய்தேன்" என்றார் அப்பெரியார்.

"அதெப்படி?" என்றான் மன்னன். அதற்குப் பெரியார் "இக்கொடுங்கோல் அரசியல் எவ்வளவு நாள் நீடிக்குமென்று நீ நினைக்கிறாய்? அதைச் சகிக்க மாட்டாது மக்கள் உன்னை எதிர்த்து உன்னையும் உன் பெயரையும் அழிக்கும் வரை நீ உயிரோடிருப்பதில் என்னபயன்? உன் முறைகள் செலாவணியாகும் இப்பொழுதே நீ இறப்பது நல்லது என்று உனக்கேதோன்றவில்லையா?" என்று கூறினார், என ஷீராஸ் நகரக் கவி வல்லோன், ஸாதி என்பார் குலிஸ்தான் அதாவது பூந்தோட்டம் எனும் தமது அரிய நூலில் ஒரு முது மொழியைக் கதை வடிவில் தீட்டியுள்ளார்.

ஆரியத்துக்கு நாம் இந்தச் சிறு கதையைக் காட்டுகிறோம்-பார்த்துப் பயன் பெறுக என்று கூறுகிறோம்.

★

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா

# திராவிடநாடு

ஆண்டுசந்தா ரூ 7

# ★ எங்கே அந்த அணிவகுப்பு? ★

—●—

"அப்பா! இந்த ஆத்மாவுக்குக் கொஞ்சம் அன்னம் அளியப்பா!"—பசி நோயால் வாடிய, ஆண்டி கேட்டான். எதிரே நின்றவர், பட்டினத்தார்!சிரித்தார்!சிரித்துவிட்டு, சோறுகேட்டவனை நோக்கிச் சொன்னார், "ஆண்டி! என்னைப் போய் பிச்சை போடச் சொல்கிறாயே! நான் குடும்பஸ்தனல்லவே! நானும் ஓர் ஆண்டிதான்!" என்று.

"ஐயோ! பசி, காதை அடைக்கிறதே" என்று பதறினான், ஆண்டி. பட்டினத்தார் அவன் படும் கஷ்டத்தைப் பார்த்துவிட்டு, "அப்பா! ஏன் இப்படி அவஸ்தைப்படுகிறாய். அன்னம் போடும்படி யாராவது, குடும்பஸ்தனைக் கேள்" என்று கூறிவிட்டு, ஒரு கணம் யோசித்துப், புன்சிரிப்புடன், "இதோ பார் ஆண்டி! ஒரு யோசனை! மேற்குக் கோபுரவாயலில் ஒரு குடும்பஸ்தன் இருக்கிறான், அவனைப்போய் சோறு கேள், போடுவான்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

பட்டினத்தார், இவ்வாறு கூறியது, கீழ்க்கோபுர வாயலில்—திருவடமருதூர் தலத்தில். ஆண்டியாக வந்தவர், அரன்! சோதிக்க வந்திருந்தார். பட்டினத்தார், முற்றுந் துறந்த முனிவர் — குடும்பம் இல்லை—எனவே, இன்னொருவருக்குச் சோறிடும் வசதி எனக்கேது, என்று கூறிவிட்டார்.

ஆண்டிக்கோலத்திலிருந்த அரன், பட்டினத்தார் கூறியபடி, 'குடும்பஸ்தனை'க் காண, மேற்குக் கோபுர வாயிற்படிக்குச் சென்றார். அங்கு, பத்ரகிரியார், நின்றுகொண்டிருந்தார், கையில் ஓர் பிச்சைச் சட்டியுடன்; அருகே ஓர் நாயுடன்!

பத்ரகிரியார், பிச்சை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, மிச்சமிருப்பதை ஓர் சட்டியில் வைத்திருப்பது வழக்கம். அத்துடன், ஒரு நாய்க்கும் கொஞ்சம் சோறிடுவார். ஆகவே, அந்தநாய், அவருடன் இருக்குமாம்.

இந்தச் சட்டிப் பரதேசியிடந்தான், சோறு கேட்குப்படி அனுப்பி வைத்தார், பட்டினத்தார்; நானோ குடும்பமற்றவன்! ஆகவே. சேமித்து வைப்பது, மற்றொருவருக்குத் தருவது என்ற முறை எனக்கு இல்லை. அந்தமுறை, குடும்பம் உள்ளார்க்கே உண்டு; அவ்விதம், குடும்பவாழ்க்கை நடத்துபவர், பத்ரகிரி! அவரிடம் சென்று கேள், என்று, பட்டினத்தார், கூறினார். குடும்பத்துக்கு அறிகுறியாக இருந்தவை, ஒரு சட்டி, ஒரு நாய் இவ்வளவே!

ஆண்டி, பத்ரகிரியாரை அணுகி, "ஐயா! சோறு! கீழ்க் கோபுர வாசலில் இருந்த ஒருவரைக் கேட்டேன்; இங்கு, ஒரு குடும்பஸ்தர் இருக்கிறார் அவரைக் கேள் என்று கூறி இங்கு அனுப்பினார். தங்களைக் கண்டேன். ஏதேனும், பசிதீரத் தாரும்" என்றார்.

பத்ரகிரியாருக்குக் கண்களிலே நீர் ததும்பிற்று; உள்ளம் குமுறிற்று. உடல் பதறிற்று. "ஆஹா! பட்டினத்தடிகளார் அங்ஙனமா கூறினார்! என்னைக் குடும்பமுடையான் என்றா சொன்னார்! ஆம்! ஆம்! பாவி நான், ஞானமார்க்கத்தின் வழி துறை அறியாது போனேன். பட்டினத்தார், என் அஞ்ஞானத்தைப் போக்கினார்! அடிகளே! சரணம்!" என்று பதைபதைத்துக் கூறி, "இந்தச் சட்டியும், இதிலே நான் சேர்த்து வைக்கும் சோறுதின்னும்இந்தநாயும்,எனக்குக் குடும்பஸ்தன் என்ற நிலையினை, நிந்தனையைப் பெற்றுத் தந்தன. முற்றும் துறப்பது என்றால், இவை இருக்கலாகாதுதான். உணர்ந்தேன் அடிகளின் உபதேசத்தை" என்று கூறி, சட்டியை ஓங்கி, நாயின்மீது வீச, சட்டியும் சுக்குநூறாகி விட்டது, நாயும் செத்துவிட்டது!! பத்ரகிரியாரும் முற்றுந் துறந்தவரானார். ஆண்டிக் கோலத்திலிருந்த அரன் மறைந்தார். நாய்க்குச் சிவலோகப் பதவி; பிறகு, இராஜாவாகப் பிறக்கும் பேறுகிடைத்தது. சட்டி, என்ன ஆயிற்று என்பதைப் புராணிகர் கூறாததால், நாம் கூறுவதற்கில்லை!

ஒரு சட்டியும், நாயும், இருந்தது, குடும்பத்தை நடத்துவதற்குச் சமானமான நிலை, என்று, பட்டினத்தார், பத்ரகிரியாரைப் பற்றிக் கூற, பத்ரகிரியாரும் அதை ஆமென்று ஒப்பினார், என்பது, துறவு இலக்கண முறை விளக்க நோக்கத்துக்காகக் கோர்க்கப்பட்ட இக்கதையின் சாரம்.

துறவிகளின் நிலை அவ்விதம் இருந்தது. கீழக்கோபுர வாயிலில் இருந்த பட்டினத்தாரின், பாரமார்த்திகக் கண்களுக்கு, மேலக்கோபுர வாயிலில், சட்டிப்பரதேசியாக நின்றவர், குடும்பஸ்தராகத் தெரிந்த காலம் அது.

* * *

* * *

"பொற்கொடி என்பது காரணப் பெயரோ, என்றுகூடக் கூறத்தோன்றும். மங்கை நல்லாள், அவ்வளவு அழகி! கைதேர்ந்த சிற்பி, அவளைக் கண்டால், காணும் மலைகளை எல்லாம், அவள் உருவங்களாகச் செதுக்கிவிட வேண்டுமென்று எண்ணுவான்"

"வர்ணனை கிடக்கட்டும். வஸ்து

நல்ல ரகம் என்பது விளங்குகிறது. ஆனால்.. ........"

"ஆனால் என்று இதிலே இழுத்துப் பேசுவது கூடாதே........"

"நான் அழுத்தமான பேர்வழி அல்ல! ஆனாலும் ஐயாயிரம் அதிகம்."

"ஐயாயிரம் அதிகமென்று நீர் கூறுகிறீர். அவர்........"

"எவர்........?"

"ஆவுடையபுரத்தருகே உள்ள........"

"அந்த மடாதிபதிக்கு, ஐயாயிரம் அற்பத்தொகை! ஐயன், அந்த மடத்துக்கு அருளியுள்ளது, எவ்வளவு! ஆயிரமன்றோ வேலி!"

"இருந்தால் என்ன........? தங்கள் காணிக்கைப் பொருள்........?"

"காணிக்கையிலே மட்டும், நமக்கென்ன, கரைபுரண்டோடியா வருகிறது? அவருக்குள்ள செல்வம், அபரிமிதமானது. அவர் ஐயாயிரமும் தரலாம், ஆறும் தரலாம். போன மாதம் அவருக்குப் போதையூர் மன்னர், பொற்பாதக் குறடு அளித்தார், அதற்கு முன்பு, அபினூர் அவில்தார் அவருக்குப், பொன்னுடை தந்தார்........"

"தங்களுக்கும் தபாபரன் குறை ஏதும் செய்யவில்லையே, மாந்தோப்பில் ஓர் மண்டபம் அமைக்கவேண்டுமென்று கேட்டீர், மருவூர் மிட்டாதாரன், முடியாது என்று கூறிவிட்டார். அந்த மாந்தோப்பில், நான் கூறும் 'ஐயாயிரம்' உம்முடன் கொஞ்சி விளையாடுவதை........"

"சம்போ! மகாதேவா! சரி, செய்யும். மங்கையிடம், நம்மைப் பற்றி, நன்றாகக் கூறிவையும். சிலதுகள், மனங்குளிரும்படி நடந்துகொள்ள மறுக்கின்றன"

"இந்த மங்கை அவ்விதமல்ல! அனுபவம் உடையவள். கேள்விப்பட்டிருப்பீரே, விநாயகபுரி மடாலயத்திலே, இவளுக்கு, பழக்கமதிகம்...."

"அங்ஙனமாயின் ஐயாயிரம் சாமான்யமே! அழைத்து வாரீர் சீக்கிரம்"

* * *

சட்டியும் நாயும் பத்ரகிரியாரிடம் இருந்ததேதவறு என்றுகூறிய பட்டினத்தடிகள் கொண்டிருந்த துறவுக் கோலத்துக்கும், ஐயாயிரம்—ஆறாயிரம் என்று, விபசாரக்கருவிக்கு விலைபேசும், துறவிகள் இருக்கும் காலத்துக்குமிடையே எவ்வளவு வித்யாசம்! நினைத்தால் நெஞ்சு வேகும் நிலைமை!

துறவின் இலட்சணம் இல்லை! அதனாலாய பயன் அணுவளவும் இல்லை. ஆனால் பொருளைக்குவித்துக் கொண்டு, சுகபோகத்தில் மூழ்கிடும் போக்கினர் உள்ளனர்.

சட்டியும் வேண்டாம் என்ற பத்ரகிரியாருக்குப் பிறகு வந்த துறவிகளுக்கு, மன்னர்கள் மானியமும் இனாமும் காணிக்கையும் தந்து, கொழுக்க வைத்துவிடவே, அவர்கள் பரத்தை மறந்து, இகத்திலேயே இலயித்துவிட்டனர். இலயித்துவிட்டதுடன், இந்தநிலை சாஸ்வதம் என்றும் இறுமாந்து கிடக்கின்றனர். இந்த நாளிலும் ஏமாளிகள் கிடைப்பர் என்று, தவறான கணக்குப்போட்டுக் கொண்டுள்ளனர். இன்றுள்ள மக்கள், சட்டியைக்கூட உடைத்தெறிந்த பத்ரகிரியாரைத் துறவி என்றால் பொருந்துமே தவிரச் சத்யத்தைத் தவிடு பொடியாக்கிக், கற்பைக்குலைத்து, மக்களைவதைத்து, மந்தகாச வாழ்வு நடாத்துபவர்களை, எந்த நியாயத்தின்படி பார்த்தாலும், சாஸ்திர விதிப்படி பார்த்தாலும், மத தத்துவத்தின்படி பார்த்தாலும், மானிடதர்மத்தின்படி பார்த்தாலும், துறவி என்று கூறுவதற்கில்லையே, என்பதைத் தெரிந்து கொண்டுள்ளனர்.

மதத்தைப் பரப்ப, ஒழுக்கத்தை வளர்க்க ஓங்காரப் பொருளை மக்களுக்குத் தெரிவிக்க, துறவிகள், தேவை என்றால், பட்டினத்தார் போல, பத்ரகிரி போலப், பற்று அற்றுச் சட்டியுமற்று உலவட்டும், மடம் ஏன், அங்குமகோற்சவம் ஏன், தங்க வட்டில் ஏன், அதிலே திராட்சைரசம் ஏன், வேலிகள் ஆயிரம் ஏன், வீணர்கள் விலாப் புடைக்கத் தின்பது ஏன்? இது துறவு அல்ல, களவு! இது சைவமல்ல, மக்களை ஏய்க்கும் வித்தை! என்று மக்கள் எண்ணத் தொடங்கி விட்டனர்.

இந்த நிலையை உணர்ந்தே இந்த மதவேடம் பூண்டு ஆதிக்கம் தேடுபவர்களின் கொட்டத்தை அடக்க, ஆரம்ப முயற்சியாக, இனாம்களை, ஜெமீன்களைப் போலவே ஒழிக்கத்தான் வேண்டும் என்று காளா வெங்கடராவ் கூறுகிறார்.

ஆனால் இதை எதிர்க்கக் கிளம்புகிறார்கள், பட்டினத்தடிகள், பத்ரகிரி, ஆகியோரின் பரம்பரை என்று தங்களை வெட்கமின்றிக் கூறிக் கொள்ளும், வெட்டிகள்!

* * *

மடாதிபதிகள் மாநாடு நடைபெற இருக்கிறதாம் சென்னையில்.

எதற்கு?

சிவ மகாத்மிய விளக்கத்துக்காகவா? வைணவ மான்மியத்தை எடுத்துரைக்கவா? அல்லது, தர்மம் நசித்து அதர்மம் மேலோங்கிவிடும்போது, 'ஐயன்' அவதரிப்பார், இப்போது அதர்மம் தலைவிரித்தாடுகிறது, எனவே 'ஐயன்' இன்ன இடத்தில், இன்ன உருவில், அவதரிக்க இருக்கிறார் என்ற அற்புதத்தை மக்களுக்கு அறிவிக்கக் கூடுகின்றனரா? இல்லை! இல்லை! ஐயோ! எங்கள் 'வயல்களை'—நிலபுலத்தை— எடுத்துக் கொள்ளப் போகிறார்களாமே!! என்று கூவ! ஈசா! சிவகாமிநேசா! வைகுண்டவாசா! இப்படியும் எங்கள் நிலை ஆகலாமா? என்று 'ஐயனை'த் தொழுதும், பயனைக் காணோம். இப்போது, மாநாடு கூட்டித் தங்கள் 'வலிவை'க் காட்டக் கிளம்பியுள்ளனர்.

நாட்டுமக்களை அவர்கள் எவ்வளவு மந்தமதியினர் என்று கருதினால், இப்படியோர் மாநாடு கூட்ட முனைவர்! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்.

ஹைதராபாத்தும், மைசூரும், கோலாப்பூரும் கொச்சியும், திருவாங்கூரும் பிறவும், மக்கள் கிளர்ச்சி வேகத்தால், ஆடிக்கொண்டிருக்கும் நாட்களிலே, இந்த வேடதாரிகள், தைரியமாகத், தங்கள் 'பரம்பரை பாத்யதை'யைக் காப்பாற்றிக் கொள்ளக்கிளம்புகிறார்கள். ஏழைகள் வாழ, நாடு முன்னேறக், கொடுமை ஒழிய, ஏதேனும் ஓர் நல்ல திட்டம் நிறைவேற்றலாமென்று எண்ணும்போது, இவர்களின் நாசகால நர்த்தனம் பலமாகிறது.

இவர்களைச் சிவ சொரூபங்கள் என்று எண்ணாதீர்! சுயநலமிகள். சுகபோகிகள்! ஏமாந்த நேரத்தில் பிறர் சொத்தைஎடுத்துக்கொண்டு ஏற்றம் பெற்றவர்கள். மக்களுக்குப், புராண இதிகாசங்கள் புகுத்திய, மூடநம்பிக்கை ஒன்றையே முதலாக வைத்துச், சுயநலவேட்டை ஆடுபவர்கள் இவர்கள்! இவர்களின் பாதத்தை வணங்குவதும், காணிக்கை கொட்டுவதும், புண்யம் பெறும் காரியமா

(15-ம பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

கூறுவதைச் சகிப்பது கஷ்டம்தான். ஆனால் சமாதான காலத்தில் சீர்திருத்தவேண்டுமென்ற எண்ணத்தோடு குற்றங் குறைகள் எடுத்துக் கூற வேண்டியது ஒரு கடமையாகி விடுகிறது.

தன்குறும்புத்தனத்தை அதாவது எதேச்சாதிகாரத்தைத் திருத்தக் கூடிய வல்லமை கிடைத்தது பத்திரிகை ஒன்றுதான். ஆனால் சுதந்திரமாயிருந்தால்தான் அந்த வல்லமை அதற்குண்டு. நமது பத்திரிகாசிரியர்கள் அந்நிய ஆட்சி வர்க்கத்தினருக்கெதிராக எவ்வளவு தைரியத்துடன் நடந்துகொண்டார்களோ, அவ்வளவு தைரியத்துடன் இப்போது நமது சொந்தத் தலைவர்களிடம் நடந்துகொள்ளவேண்டும். இது நமது தலைவர்களில் சிலருக்கு வேப்பங்காயாக இருக்கலாம். ஏனெனில் இதுவரை அவர்களுடைய பேச்சிற்கு மறுபேச்சு இல்லாமலிருந்து வந்தது. ஆனால் தங்கள் தலைவர்களின் நேரான நடத்தையை எதிர்பார்ப்பது ஜனநாயக மக்களின் உரிமையாகும். "சர்வமும் நாம்தான்" என்ற மமதை கொண்ட எந்தவொரு மனிதனும் ஜனநாயக ஆட்சிக்குத் தலைமை தாங்கத் தகுதியுடையவனாக முடியாது.

வீரர் வணக்கம் பற்றிய எனது கருத்திற்கு இது தோற்றுவாயாகிறது. ஒரு போராட்டத்தின் போது அது ஆயுதப் போராட்டமாயினும் சரி, அஹிம்சைப் போராட்டமாயினும் சரி, நமக்கு ராணுவ மனோபாவம் அவசியமாகிறது. ஆகவே இங்கு நமது வீர வணக்கம் தீவிரப்பட்டு, மேலே போகப்போகப், பல இடத்தில் சிதறிக் கிடந்த நமது விசுவாசம் ஒருமுகப்பட்டு எல்லோருக்கும் மேம்பட்டு விளங்கும் அந்த ஒரு மனிதரிடமே செல்கின்றது. பார்க்குமிடமெல்லாம் அவரது முகமே நம்முன் தோன்றுகிறது. சகல குணநலன்களையும் நாம் அவருக்கு உரிமையாக்கி விடுகிறோம். வேறு யாரும் நம்மைத் திருப்திப்படுத்த முடியாது.

ஆயினும் சாதாரண காலத்தில் ஒரு ஜனநாயக அரசை உருவாக்கிக் கொண்டிருக்கும் போது நமது வீர வணக்கமானது ஒரு முகமாகத் தீவிரப் படுவதற்கு பதிலாகப்பல திசையில் பாந்து செல்லவேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் வீரர்களாகி விடும் ஒரு காலம் வரும்வரை நாம் அனேக வீரர்களைப் பெறவேண்டும். சாதாரண மனிதனின் பெருமைதான் ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது. அமெரிக்காவில் போல நாம் அரசியலைத் தவிர மற்றத்துறைகளிலும் அதாவது கலைத் துறையில், இலக்கியத் துறையில், தொழில் துறையில், தொழிலாளர் இபக்கத் துறையில், சினிமாத் துறையில் வீரர்களைப் பெறவேண்டும். இங்கு நாட்டின் பத்திரிகைகள் புதிய சமுதாயத்திலிருந்து புதிய தலைவர்களை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம் பணி செய்ய முடியும். இப்போது நமது பத்திரிகைகளில் ஒவ்வொரு நாளும் நாம் எப்போதும் பார்க்கும் அதே முகங்கள்தான் பிரசுரிக்கப்படுகின்றன. வழக்கமான ஒரு சில தலைவர்களின் சொற்கள்தான் வெளியாகின்றன.

மற்றவர்களும் செய்திகளில் இடம் பெற முடியுமென்பதையும் அச்செய்திகளை ஜனங்கள் படிப்பார்கள் என்பதையும் முயற்சி ஊக்கமுடைய நிருபர்கள் காண்பார்கள்.

ஜனநாயகம் ஆழ்ந்து வேரூன்ற, வேரூன்ற, பெரியவர்களுக்கே புகழ் பாடும் மனோபாவம் அருகத் தொடங்குகிறது. சாதாரண மனிதனுடைய முக்கியத்துவம் அதிகரித்துக் கொண்டே போகும்போது "படே மனிதர்களோடு" அவனை ஒப்பிட்டுக் கூறவேண்டிய அவசியம் குறைந்து விடுகிறது. அமெரிக்காவில் சாதாரண மனிதன் எப்படி வாழ்கிறான் என்பதை எடுத்துரைக்கும் புத்தகங்களும் பத்திரிகைகளும், பெரிய மனிதர்களின் செய்கைகளை விவரிக்கும் புத்தகங்களைப்போலப் பிரபலம் பெற்று விளங்குகின்றன."

* * *

ஒரே கட்சிக்கே நாடாளும் வாய்ப்பு இருக்கவேண்டும். அந்தக் கட்சி எவ்வளவு தவறுசெய்தாலும், எடுத்துக் காட்டுவதுகூடத் தவறு, அந்தக் கட்சியின் தலைவர்களின் புகழ் பாடுவதன்றி வேறோர் காரியம் செய்தலாகாது, என்ற மனோபாவம், சர்வாதிகாரத்திலே போய்ச்சேரும், என்ற உண்மையையும், விடுதலைப் போரின்போது, மகாவீரராக யாரேனும் ஒருவர் விளங்கினார் என்றால், நாட்டை ஆளும் நிர்வாக காரியத்திலும் அவர், மகாவீரராகவே இருந்து தீருவார்; அங்ஙனம் இல்லை என்றாலும், அவரைக் கண்டிப்பது கூடாது என்று கட்டளையிடுவதும், நிச்சயமாக நாட்டு முன்னேற்றத்தைத் தடுக்குமென்பதையும், அறிஞர், விளக்கிக் கூறியிருக்கிறார் இக்கட்டுரையில். இவர், காங்கிரசுக்கு எதிர்க் கட்சி நடத்திக் கொண்டிருந்தவருமல்ல. உலக நிலைமையும், நாடாளும் முறைகளையும் ஆராய்ந்து இதனைக் கூறினார். ஆனால் இங்குள்ள காங்கிரசாருக்கோ, என்றென்றும் ஆட்சி உரிமை தமக்கே என்ற எண்ணமும், அந்த நிலையைப் பாதுகாத்துக்கொள்ளத், தம்மிடம் அதிகாரம் இருக்கும் இந்நாளிலேயே, மிகக் கடுமையான நடவடிக்கைகள் மூலம், காங்கிரசுக்கு எதிர்க்கட்சி என்று ஏதும் இருக்கமுடியாதபடி செய்துவிட வேண்டுமென்றும், எண்ணம் பலமாகிவிட்டது. பேச்சும் நடவடிக்கையும் இதற்கு ஏற்றபடியே இருந்திடக் காண்கிறோம்.

"இவர்களை எல்லாம் பிடித்து ஜெயிலில் போட்டுவிடப் போகிறோம்" என்று மேடையில் பேசுவது, இப்போது காங்கிரஸ் பிரசாரகர்களுக்கு மிகச் சகஜமாகிவிட்டது.

"இதோ தந்தி கொடுத்துவிட்டோம் மந்திரிக்கு. நாளைக்குள்ளே அரெஸ்ட்டு வாரண்டு பிறந்துவிடுகிறது பார்" என்று மிரட்டுவதிலே, இப்போதுகாங்கிரசார்புதியகளிப்புப் பெறுகின்றனர்.

ஒரு காலத்திலே, தொல்லைக்கு ஆளாகி, அடக்குமுறையினால் தாக்கப்பட்டவர்களானபடியால், தங்களுக்கு ஆளும் வாய்ப்புக் கிடைத்த உடனே, பிறர், தங்களைக் கண்டு பயப்படவேண்டும், பிறரை அடக்கி ஆளவேண்டும், என்ற எண்ணம், அவர்களுக்குச் சுலபத்திலே உண்டாகிவிடுகிறது. சாமான்யர்களுக்கு, இந்த அதிகாரம் பெற்ற நிலை, சாஸ்வதமானது என்றே தோன்றும். ஒரு மந்திரி சபைக்குச் சட்டப்படி உள்ள ஆயுட்காலம்கூட இருப்பதற்கின்றி, பிரகாசம் இருண்டு, ஓமாந்தூரார் ஒளிவிடும் மாறுதல் மந்திரி சபைக்கே ஏற்பட்டுவிட்டதே, இதற்கே இந்த நிலை என்றால், நாடு ஆளும் நிலை நமக்கே என்றென்றும் இருக்கும் என்று எதைக்கொண்டு தீர்மானிப்பது என்றுகூட அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

அடக்குமுறை, ஒரு விசித்திரமான சக்தி.

அதை, உபயோகப்படுத்துவோ

ருக்கு, துவக்கத்திலே, களிப்பு அதிகரிக்கும். சவுக்கெடுத்துக் காளையின் முதுகிலே 'சுளீர்' என அடி கொடுத்ததும், அது, துள்ளி, வேகமாக ஓடும்போது, உண்டாகிற களிப்பு போல, அடக்குமுறையை வீசி, எதிர்க் கட்சியினரை இம்சை செய்து, அவர்கள் கஷ்டம் அனுபவிப்பதைக் கண்டதும், ஒருவகை களிப்புப் பிறக்கும்

அதே போல, முதல் தாக்குதல், அடிபட்டவனுக்கு அதிக வருத்தத்தை, சோகத்தை, திகைப்பைத் தான் தரும். அவனிடம் அதிகாரம் இருக்கிறது, நாம் என்ன செய்ய முடியும் அவனுக்கு எதிராக, என்ற எண்ணம்வரும்.

அடிக்கடி 'சவுக்கு' வீசவேண்டியும், ஒவ்வொருமுறை சவுக்குவீசும் போதும், காளை துள்ளுவதோடு மட்டும் நிற்காமல், துரிதமாக ஓடுவதும் மூலைவாருவதுமாக இருந்தால், முதல் சவுக்கு வீசியபோது உண்டான ஆனந்தம் கருகி, இதேதடா தொல்லை! என்று, சலிப்புப் பிறந்து விடும்—கையிலே சவுக்கு இருப்பினும். அடக்கு முறை உபயோகிப்பவருக்கும் அதேநிலைதான். ஆரம்பத்திலே அதனை உபயோகிக்கும் போது ஏற்படும் களிப்பு, அதனை, அடிக்கடி உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், உண்டாகாது. சலிப்பும், இப்படியே, அடக்கு முறையைக் கொண்டே எவ்வளவு காலத்துக்குத் தான் ஆட்சியைநிலைநிறுத்துவது என்ற அச்சமும் ஏற்படும்.

அதுபோலவே, முதன் முறை தாக்குண்ட போது, துயரப்பட்டு, திகைத்தவர்கள், பிறகும் அடிக்கடியும் தாக்குதலை அனுபவிக்க நேரிட்டால், துயரமும் திகைப்பும் தீய்ந்து போகும், உறுதியும் எதிர்ப்புச் சக்தியும் புதிதாகத் தோன்றும்.

அடக்குமுறை, இவ்வித மான பலன்கள் தரும், ஓர்வகைவிசித்திரச் சக்தி.

சாவது அவ்வளவு கஷ்டமானதல்ல—என்று கூறிக்கொண்டே இறந்தாள் ஓர் மங்கை—கொடுங்கோலனிடம் சிக்கியபோது. அவளுடைய கணவனின் செவியிலே அந்த வாசகம் வீழ்ந்தது! சாவது அவ்வளவு கஷ்டமில்லை! செத்துக்கொண்டே கூறினாள் சேல்விழியாள்! —நானோ சாவுக்கு அஞ்சி, கொடுங்கோலனைச் சரணடையலாமா என்று கூட யோசித்தேன். சே! நான் கோழை! ஆகாது இக் கோழைத்தனம் என்று கூறி, சீறிப் போரிட்டுக் கொடுங்கோலனை விரட்டினான், என்றோர் கிரேக்கக் கதைஉண்டு. அது போன்றே, அதிகாரத்தைப் பெற்றிருக்கும் கட்சி அடக்குமுறை கொண்டு எதிர்க்கட்சியைத் தாக்கும் போது, அந்தத் தாக்குதலைச் சமாளித்து விட்டால், பிறகு பிறக்கும் புதிய சக்தியின் உருவைக் கண்டு நாமே ஆச்சரிய மடைவோம்.

அடக்கு முறையின் இந்த இலட்சணத்தை ஆராய அவர்களுக்கு அவகாசம் இல்லை. எனவே தான், ஆள்வதற்கு நாங்கள் கிளம்பிவிட்டோம், இனி நாட்டிலே வேறு எக் கட்சியும் இருக்க அனுமதியோம் என்று கூறுகிறார்கள்.

தமது ஆதிக்கத்திற்கு அடிபணிவோரெல்லாம் நல்ல பிள்ளைகள்; மற்றையோர் துடுக்கர்கள் என்றே உலகில் இதுவரை எல்லா எதேச்சாதிகாரிகளும் எண்ணி வந்தனர். ரஷிய நாட்டை ரணகளமாக்கிய ஜார் மன்னனும் அப்படித்தான் எண்ணினான். சில்லறை அதிகாரம் வகிக்கும் சிறு தேவதைகளும் அவ்வண்ணமே எண்ணுகின்றன; எதிர்ப்பு என்றஉடனே எரிச்சல் வருவதும், அதனை அழித்தே விடுவது என்ற ஆணவம் எழுவதும், அழிக்க எத்தகைய கொடிய இழிந்த முறைகளைக் கையாளும் துணிவு ஏற்படுவதும் வீரமென்று அவர்கள் எண்ணிக் கொண்டு செய்யும் பயங்கொள்ளிச் செயல்களாகும். உண்மையில், எதிர்ப்பில் சக்தி இல்லாவிடின் எதிர்ப்போருக்கு நாட்டிலே ஆதரவு வராது என்ற எண்ணமிருப்பின், யார் எவ்வளவு எதிர்ப்பினும் தமது செல்வாக்குக் குறையாது என்ற நம்பிக்கை இருப்பின், தம்மைப் பற்றி மக்கள் உண்மையை உணரும்படி செய்யத் தங்களால் முடியும் என்ற வீரஉணர்ச்சிஇருப்பின், எதிர்ப்பைக் கண்டதும் அதன் மீது உடனே பாய்ந்து அடித்து ஒழித்துவிட யாரும் எண்ணார்.

வீரருககு அழகு, எதிர்ப்படும் எத்தனை ஆபத்தையும் பொருட்படுத்தாது போரிடல். கோழைகளின் கொள்கை, எதிர்ப்பு என்ற உடனே 'என்னாகுமோ நமது கதி' என்று பயந்து, பதைபதைத்து, பாதகச் செயலையும் செய்யத்துணிவது. முன்னையோர் முடிவில் வெற்றியும், பின்னையோர் இறுதியில் தோல்வியும் பெற்று வந்ததாலேயே, இன்று உலகில் ஏதோ ஓரளவுக்காவது நீதியும் நேர்மையும் நிலைத்திருக்கின்றன.

புரட்சி என்பது இயங்கும் சக்தி! அதைப் பொசுக்கி விட யாராலுமாகாது. புரட்சி என்பது மக்களின் போராடும் சக்தியின் வழி வருவது. புரட்சி வாலிபத்தின் கூறு! பகுத்தறிவாளர் ஆயுதம். பழமை விரும்பிகள், புரட்டர்கள், எதேச்சாதிகாரிகள், சர்வாதிகாரிகள் ஆகியோருக்கு நஞ்சு. எனவேதான் அத்தகையோர் புரட்சி என்றசொல்லைக் கேட்டதும் மருட்சி அடைந்தே விடுவர். நீண்டு வளர்ந்து நிற்கும் நெடு மரங்களும் அசைந்து, ஆடி, சுழன்று, அடி அறுபட்டு, வீழ்ந்து நொறுங்கும் சூறாவளி வரின். அதைப் போன்றே ராணுவம், பொக்கிஷம், கர்வம், கபடம், ஆணவம், அகந்தை ஆகிய எல்லா ஆயுதங்களையும் ஒருங்கே படைத்துத் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என இறுமாந்து கிடந்த எத்தனையோ எதேச்சாதிகாரிகள் இடர்ப்பட்டு, இடிபட்டு, கீழே உருண்டனர், புரட்சியின் வேகத்தைத் தாங்கமாட்டாது. எனவேதான் அவர் வழி வந்தவருக்கெல்லாம் புரட்சி என்றதும் மருட்சி ஏற்பட்டு விடுகிறது. மருட்சி அவர்களைக்காப்பாற்றாது. மருட்சி கொண்டோன், பலப்பல கொடுமையான காரியங்களையும் கூசாது செய்வான். எனினும், எச்செயலும் புரட்சிப் புயலில் அவனைச் சிக்க வைக்காது போகாது. இது சரித்திரம்.

எதேச்சாதிகாரிகளுக்கு அரசியல் அதிகாரம் கிடைத்தால், அதனை வைத்துக் கொண்டு சட்டம் கொண்டு புரட்சியை ஒடுக்கப் பார்ப்பர். ராணுவ பலமிருப்பின் புரட்சிக்காரரை சுட்டுக் கொல்லுவர். இரண்டுமின்றி நமது நாட்டில் அந்த நாளிலே இருந்ததாகக் கூறப்படும் ரிஷிகளாக இருப்பின் சபித்து விடுவர். இன்று அந்த "ரிஷிபரம்பரையில்" வந்தவராகக் கருதப்படும் காந்தியாரும், அவரது பூசாரிகளும், ஒழுங்கு நடவடிக்கை எனும் தண்டத்தை வீசுகின்றனர். ஒன்றுமே இல்லாத பேர்வழிகள், ஏதோ தங்களாலான விதத்திலே தமது சமர்த்தைக் காட்ட முற்படுவர். இந்தி எதிர்ப்பை அடக்கி விடலாமென

(17-ம் பக்கம் பார்க்க)

# ★ சாஸ்திரியார் கட்டிய ஜல்லடம் ★

இனாம்தாரர்கள் சார்பாக, T. R. வேங்கட்ராம சாஸ்திரியார், ஜல்லடம் கட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கிறாரல்லவா! அந்த ஜல்லடம், அவர் கட்டிப், பத்தாண்டுகளுக்கு மேலாகிறது.

அவருக்கு முன்பும், பலர் ஜல்லடம் கட்டினர், சர்மா, ஐயர், ஐயங்கார், சர், அட்வகேட், அட்வகேட் ஜெனரல் ஆகியோர். நீண்டபோர்! சுவையுள்ள காரணம், அப்போருக்கு. அந்தக் காரணவிளக்கம் இது.

இனாம்தாரர்கள், ஜெமீன்தாரர் போல் அல்ல, அவர்களுக்கு, உரிமை அதிகம்; ஜெமீன்தாரராவது நிலத்துக்கு வரி வசூலித்து, ஒருபகுதியைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட்டுப், பெரும் பகுதியைத் தனக்காக எடுத்துக் கொள்ளமட்டுமே உரிமைகொண்டவர். இனாம் தாரர், இதுபோல, வரி வசூலிக்கும் அதிகாரி மட்டுமல்ல, நிலத்துக்குச் சர்வ சுதந்திரத்துடன், சர்வ உரிமைகளை அனுபவிக்கும் நிலை பெற்றவர்—என்று தான் சட்டமும் சம்பிரதாயமும் இருந்தது. 1908-ல் இந்த முறைப்படியே, இனாம்தாரர்களின் உரிமையைப் பாதுகாத்தும், அந்தஸ்த்தை உயர்த்தியும் பிரிட்டிஷார் சட்டம் இயற்றினர்.

ஆனால், இனாம்தாரர்களின்கொட்டத்தை 1936-ம் வருஷ இனாம் சட்டத்தின் மூலம், ஜஸ்டிஸ் மந்திரி சபை நொருக்கிற்று.

இனாம தாரர்களும், ஜெமீன் தாரர்போன்றவர்களே—நிலத்துக்குத் தீர்வை வசூலிக்கும் உரிமை பெற்றவர்களே—இனாம் குடிகளுக்கு அவர்கள் கோமான்களல்ல, என்று சட்டம் இயற்றினர்.

அப்போது, மயிலையும் திருவல்லிக்கேணியும், இப்போது போடுவதுபோலவே, கூக்குரலிட்டன.

சர்மாக்களும் ஆச்சாரியாரும், சாஸ்திரவிரோதமான காரியம் இது—சண்டாளர்கள் ஆட்சியால் நேரிடுகிறது, என்றுகண்டித்தனர்.

பொதுவுடமையைப் புகுத்தும் சட்டம் இது—பரம்பரை பாத்யதையைப்பறிக்கும் சட்டம் இது—நாஸ்திகர்களின் சட்டம் இது—என்று, T. R. வேங்கட்ராம சாஸ்திரியார் அப்போது ஆர்ப்பரித்தார்—இப்போது போலவே. ஓடிஓடிமாநாடுகள் கூட்டினார். பாபட்லாவில்நடந்த ஒருமாநாட்டிலே, ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்களான ஜெமீன்தாரர்களும், தொண்டர்களான புரட்சிக்காரர்களும், ஒன்றுகூடிக் கொண்டு, இனாம் தாரர்களை ஒழிக்கச் சதிசெய்கிறார்கள் என்று ஓலமிட்டார். இதைச் சட்டமாகும்படி விடமாட்டேன், என்று சபதம் செய்தார். அப்போதும், அவர், அகில உலகத்திலே உள்ள நாடுகளின் சட்டபுத்தகங்களைச் சாட்சிக்கு இழுத்தார்.

காங்கிரஸ் தலைவர்கள், 'சாஸ்திரியாருடன் கைகோர்த்துக்கொண்டு, எந்தச் சட்டம் உண்மையாகவே, நிலமுதலாளித்துவத்தின் ஒருபகுதியைத் தாக்கி, ஏழை உழவனுக்கு உரிமை கிடைக்கவழி செய்ததோ, அதே இனாம் சட்டத்தை எதிர்த்துப்பேசிப், பொதுமக்கள் மனதைக் கலைத்தனர்.

ஜஸ்டிஸ்மந்திரிகள், சட்ட புத்தகங்களைச் சட்டை செய்யவில்லை. சாஸ்திரியாரின் புலம்பலைப்பொருட்படுத்தவில்லை. இனாம் குடிகளின் நன்மையைக்கைவிட முடியாது, என்று தெளிவாகக் கூறிவிட்டனர்.

மயிலையும் திருவல்லிக்கேணியும், கவர்னரிடம் தஞ்சம் புகுந்தன. கவர்னர் மயிலை மகிமையாலும், திருவல்லிக்கேணி தரிசன விசேஷத்தாலும், சொக்கிப் போனார். சட்ட சபையிலே, இனாம் குடிகள் மசோதா நிறைவேறியும், அதனைச் சட்டமாக்க முடியாது என்று கூறினார். இருமுறை, நிராகரித்தார். ஜஸ்டிஸ் மந்திரிகள் இந்தப் பிரச்னையை விட்டுவிடமறுததனர்; கடைசியில், கவர்னர் இணங்கினார்.

மயிலை, சென்னையிலிருந்து, நேரே, டில்லிக்குத்தாவிற்று! வைசிராயிடம் காவடி எடுத்தனர்.

வைசிராய், அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு, சட்டத்தை அங்கீகரிக்க மறுத்தார். விடவில்லை ஜஸ்டிஸ் மந்திரிகள். போராடினர். கடைசியில், வேறுவழியின்றி, வைசிராயும், இணங்கினார். சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு இடையூறுகள் பதினோராண்டுகளுக்கு முன்பு. இப்போது, அந்தச்சட்டத்தின் வளர்ச்சி போன்ற, புதியசட்டம் ஏற்பட இருக்கிறது. இப்போதும், அந்தப்பழைய முறைப்படியே எதிர்ப்பு, பார்ப்பனத்தலைவர்களிடமிருந்தும், காங்கிரசிலுள்ள வைதிகர்கள், காட்டுராஜாக்கள் ஆகியோரிடமிருந்தும் வருகிறது.

1908-ம் வருஷச்சட்டத்தின்படி, இனாம் நிலங்களை, இனாம் தாரர், தன் இஷ்டப்படி, விற்கஉரிமை இருந்தது. ஜஸ்டிஸ் மந்திரிசபையின் சட்டத்தின் பலனாக, இனாம்தாரர்களின் சொக்கட்டானாக, நிலங்கள் இருந்த நிலை ஒழிந்து, 1933-ம் வருஷம் நவம்பர்மாதத் துவக்கத்தின் போது, எந்தெந்த இனாம் நிலம், எந்தெந்தக் குடியானவனிடமிருந்ததோ, அவனுக்கு உரிமை கிடைத்தது. இனாம் தாரர், வரிவாங்கும் அளவோடு, இருக்கவேண்டியதாயிற்று.

இப்போது கொண்டுவரப்படும், மசோதா, இந்தவரி வசூலிக்கும் வேலையையும், இனி இனாம்தாரரிடம் விடவேண்டியதில்லை, அவர்களுக்கு ஏதேனும் பணம், நஷ்டஈடாகக் கொடுத்துவிட்டு, நிலத்தை, ரயத்வாரிமுறையின்கீழ்க் கொண்டு வந்து விடலாம், என்பதாகும்.

"ஏதடா தொல்லை வளருகிறது! ஜஸ்டிஸ்மந்திரிகளோ, நமக்கு, நிலத்தின் மீது பூரண பாத்யதை கிடையாது, என்றனர்—இப்போது காங்கிரஸ் மந்திரிகளோ, இந்த வரிவசூலிக்கும்காரியமும், இனிக்கூடாது, என்கிறார்கள். நமக்கு உள்ள ஆதிக்கம், இலாபம், எல்லாம் போகின்றனவே!" என்று இனாம்தாரர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

பிடிபட்ட கள்ளனைகூடப், போலீசார் கொடுக்கும் அடி உதையையும் மறந்துவிட்டு, இவ்வளவுகஷ்டப்பட்டுத் திருடிய பொருளை, போலீசார், சொந்தக்காரனிடம் கொடுத்துவிடுகிறார்களே. நாம் பட்ட கஷ்டமெல்லாம் வீணாயிற்றே—என்று விசாரப்படக்கூடும்.

ஆனால், அந்தவிசாரத்துக்காகளப் படிக்களவுஅனுமதிக்கப்பட முடியாதோ, அதே போலத்தான், ஜெமீன்,இனாம் போன்ற, முறைகளையும், நாகரிக சர்க்கார் அனுமதிக்க முடியாது, இனாம்தாரர்களின் கண்களிலேஇரத்தக்கண்ணீர் வழிந்தாலுங்கூட.

இனாம்தாரர்களிலே, மிகச்சிறு அளவு நிலம் வைத்துக்கொண்டுள்ளவர்களுக்காக வாதாடுவதாகக் கூறிக்கொண்டு, மறைமுகமாக, படாதிபதிகள் போன்ற கொழுத்த இனாம்தாரர்கள் சார்பிலே வாதாடுகிறார், வக்கீல் தொழிலை, வர்க்க நலனுக்கு வழங்கும் வெங்கட்ராமசாஸ்திரியார். ஒரு ஏகர், இரண்டு ஏக்கர், நிலங்கள் மட்டுமே வைத்துக்கொண்டுள்ள ஏழை இனாம்தாரரின் கண்ணீரைக் காட்டுகிறார். அந்தக் கண்ணீரைத் துடைக்கச் சொல்லிமட்டும் கேட்கிறாரா? இல்லை! அதைச்சாக்குக்காட்டி, ஏமாந்த ராஜாக்களிடம் ஏதேதோ செய்து நிலத்தைத்தட்டிப் பறித்துக்கொண்டு, இனாம்தாரராகி, இன்று பாடுபடாமல் பன்னீரில் குளிக்கும் பேர்வழிகளைக் காப்பாற்றக் கிளம்புகிறார்.

இந்தக் காரியத்தை இவர், தொடர்ந்து செய்து வருகிறார். ஜஸ்டிஸ் மந்திரிகள், இனாம் சட்டம் கொண்டுவந்த காலமுதற்கொண்டு, விடாது செய்து வருகிறார்.

"பொதுக் கூட்டங்கள் போட்டோம் —மாநாடுகள் நடத்தினோம்—துண்டு வெளியீடுகள் போட்டோம் — ஜஸ்டிஸ் மந்திரி சபையின் திட்டத்தைப் பலவழிகளிலும் தாக்கினோம், தகர்க்க" என்று அவரே ஆணவத்துடன் கூறினார், பிரகாசம்அமைத்த ஜெமீன்முறை விசாரணைக் கமிட்டியார் முன்பு.

இந்தக்கமிட்டி, ஆச்சாரியார் மந்திரிசபைக்காலத்திலே அமைக்கப்பட்டது. பிரகாசம் இதற்குத் தலைவர். ஜெமீன்தாரர்கள் சார்பிலே, இந்தக்கமிட்டியிலே, மிர்சாபூர் ஜெமீன்தாரர் வீற்றிருந்தார்.

இந்தக்கமிட்டியார், விசாரணை நடத்தினர், கலெக்டர்களின்குறிப்புகளைத் தொகுத்தனர், நிலப்பிரபுக்களின் அறிக்கைகளைச் சேர்த்தனர், பல இடங்களைக் கண்டனர், ஏராளமான பணம் செலவு செய்து, பல ஆயிரம் பக்கங்கள் கொண்ட, அறிக்கை தயாரித்தனர்.

இவ்வளவும் செய்துவிட்டு, ஜெமீன்தாரி ஒழிப்பைமட்டும் செய்யாமல், ஆச்சாரியார் மந்திரிசபை கலைந்துவிட்டது.

அந்தக்கமிட்டியின் முன்பு,இன்று மந்திரியாக உள்ள, காளா வெங்கட்ராவ்சாட்சியம் கூறுகையில்,"ஜெமீன்கள்போலவே இனாம்களும் ஒழிக்கப்படவேண்டியவைகளே" என்றுபேசியிருக்கிறார்.

அதே கமிட்டியின் முன் சாட்சியம் தந்தவெங்கட்ராமசாஸ்திரியார், இப்போதுபோலவே, இனாம்தார்களுக்காகப்,பிடிவாதமாகவாதாடியதோடு, ஜஸ்டிஸ் மந்திரிசபை நிறைவேற்றிய சட்டத்தையும் ரத்து செய்து,இனாம்தாரர்களுக்கு முழுஉரிமை கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார்.

இங்ஙனம் இவர் இடைவிடாமல் இனாம்தாரர் பக்கம் வேலை செய்து வருவதுடன், 'இந்து' பத்திரிகையின் ஆதரவைப்பெற்று, அவ்வப்போது ஏற்படும் மந்திரி சபைகளை, (ஜஸ்டிஸ் மந்திரிசபையானாலும் சரி, காங்கிரஸ் மந்திரிசபையானாலும்சரி) மிரட்டிப் பார்க்கிறார்.

ஜெட்லண்டு பிரபு இந்தியா மந்திரியாக இருந்தபோது, கவர்னர், வைசிராய் ஆகிய இருவர் போட்ட முட்டுக்கட்டைகளைத்தாண்டி நிறைவேறிய இனாம் சட்டத்தை, இந்தியா மந்திரி தொலைக்க வேண்டுமென்று, பெரிய மகஜர் தயாரித்து அதை அனுப்பிவைக்கும்படி சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொண்டார். அப்போது ஆச்சாரியார் முதலமைச்சர். அவருக்குச் சங்கடமான நிலை ஏற்பட்டுவிட்டது. காங்கிரஸ் கட்சியினர், இந்தியா மந்திரி, எங்கள்விவகாரத்தில் தலையிட நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை என்று மேடை அதிரப்பேசிவிட்டனர். எனவே,ஆச்சாரியார், சாஸ்திரியாரின் தாட்சணியத்துக்காக வேண்டி, இந்தியாமந்திரிக்கு மகஜர் அனுப்புவது தவறு, என்று காங்கிரஸ் சட்டசபையினர் கூறிவிட்டனர். வெங்கட்ராமசாஸ்திரியார், காரியம் பலிக்காமல் வீடு திரும்பினார்.

இதுபோல் இவர் இடைவிடாது செய்துவருவதுமட்டுமல்ல, இவர் போலச்சில பார்ப்பனத் தலைவர்கள, பன்னெடு நாட்களாகஇந்தக்காரியம் செய்து வருகின்றனர்.

கிழக்கிந்தியக் கம்பெனி நாட்டை ஆளத்தொடங்கிய உடனே, ஆங்காங்கு, காட்டு ராஜாக்கள் கிளம்பினர். அவர்களில் பலரைச் 'சரிப்படுத்த' கம்பெனி வேலை செய்தது. ஜெமீன்தாரர்கள் முளைத்தனர். அதேபோது, ஒருபெரிய கும்பல், நாங்கள் இனாம்தாரர்கள், சுரோத்திரியதாரர்கள், அக்ரகாரதாரர்கள், ஜாகீர்தாரர்கள், என்று பல்வேறு பெயர்களைக் கூறிக்கொண்டு,புராண ஆதாரமுதற்கொண்டு, செப்பேடு ஆதாரம் வரையிலே, 'சாசனம்' இருப்பதாகக் காட்டிக்கொண்டும், "சாசனம்" என்று ஏதும் இல்லை ஆனால் 'சந்திரசூரியாள் உள்ளவரை,ஆண்டுஅனுபவித்துக்கொள்ள வேண்டியது' என்று எமக்கு, இன்ன மகாராஜா, வாக்களித்தார். அது போலவே நாங்கள், இந்தக்கிராமங்களை, 'பாரம்பரியமாய்' ஆண்டுஅனுபவித்துவருகிறோம் என்று கூறிக்கொண்டும், ஏராளமானவர்கள் கிளம்பினர்.

இவர்களிலே யார் உண்மையானவர்கள், யார் போலிகள், என்பதை ஆராய்வது, பெரிய தலைவலியாகிவிட்டது பரங்கியருக்கு. கடைசியில் சுமார் 50 வருஷகாலமாக, யாரார் 'இனாம்' முறையில், நிலங்களையோ, ஊர்களையோ, அனுபவித்து வந்தார்கள் என்று ஏற்படுகிறதோ, அவர்களுக்கு இனாம்தாரி உரிமை உண்டென்று, நாங்கள் அங்கீகரிக்கிறோம் என்று கூறிவிட்டனர். அவர்களுக்கு என்ன அதனாலே நஷ்டம்! அவர்களே அக்ரமமாக நாட்டைப் பிடித்துக்கொண்டவர்கள். எனவே ஆளுக்குக்கொஞ்சம் அகப்பட்டவரையில் சுருட்டு!! இந்த முறையிலே, புத்துயிர் பெற்றனர் இந்த இனாம்தாரர்கள்.

அதற்குப்பிறகு, இனாம்தாரர்கள் சம்பந்தமான பிரச்னை, கிளம்பிய போது, இன்று வெங்கட்ராம சாஸ்திரியார் அவர்கள் சார்பில் வாதாடுவதுபோலவே, அப்போது சர். V. பாஷ்யம் ஐயங்கார் போன்றவர்கள் வாதாடினர்.இதே'கைங்கரியத்தை'சர். தேசிகாச்சாரியார், திவான்பகதூர் R. V. சீனுவாசஐயர், C. K. சீனுவாசராவ், K. R. குருசாமிஐயர், அந்நாளில் அட்வகேட் ஜெனரலாக வேலை பார்த்த சிவசாமிஐயர், நரசிம்மேஸ்வரசர்மா ஆகியோர் செய்துவந்தனர்.

**1908** முதல் **1947** வரையில் எந்தெந்தச் சமயத்திலே, யாரால் இனாம்தாரர்களின் பிரச்னை பரிசீல

னைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், பிரபல பார்ப்பனத்தலைவர்கள் இனாம்தாரர்பக்கமேநின்றுவாதாடிக் குறிப்பிட்ட அளவு வெற்றியும் பெற்றுள்ளனர். இந்த வெற்றிக்கு ஒருபெரிய இடியாக முடிந்தது ஜஸ்டிஸ் மந்திரிசபை கொண்டுவந்து நிறைவேற்றிய இனாம்தாரர் குடிவாரச்சட்டம்.

இனாம்தாரர்களின் ஆதிக்கத்தைக் காப்பாற்ற, இங்ஙனம் சர். வி. பாஷ்யம்ஐயங்கார் காலமுதல் T. R. வெங்கட்ராமசாஸ்திரியார்காலம்வரை பிரபல பார்ப்பனத்தலைவர்கள், கச்சை கட்டிப்புறப்படுவதைக், காரணமற்ற சம்பவமென்று யாராவதுதள்ளிவிட முடியுமா? சுயஜாதி அபிமானம், வகுப்புவாத வெறி; இவைகளே இந்த நிலைமைக்குக் காரணம், என்பதை மறைக்கமுடியுமா? ஏன், இனாம்தாரர்களிடம், இந்தத்தலைவர்களுக்கு இவ்வளவு அக்கரை ஏற்படுகிறது? இதோ காரணம்.

இனாம்கள், இந்துமத சாஸ்திரப்படி, புண்யம் தேடுவதற்காக மன்னர்களால் தரப்பட்டவை. சாஸ்திரப்படி, 'தானம்' வாங்கும் உரிமை யாருக்கு? பார்ப்பனருக்கே! எனவே பெரும்பாலான இனாம்கள் பார்ப்பனர் பெற்றதானங்கள்.

மற்றும் புண்யகாரியம் என்று கருதப்பட்டு,

பூந்தோட்டம்
சாவடி
சத்திரம்
வேதபாடசாலை

இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்காக என்றும், பொதுவாகவே

கோயில்
மடம்

ஆகியவற்றுக்கான காரியத்துக்காகவும், 'இனாம்' நிலங்கள், வழங்கப்பட்டன.

இந்த இனாம்கள், இந்து மதத்தத்துவத்தின்படி ஏற்பட்டது என்ற போதிலும், இந்து மன்னர்கள்மட்டுமல்ல, முஸ்லீம் மன்னர்கள், வந்துபோன மராட்டிய மன்னர்கள், பிடித்தாட்டிய பரங்கியர் அனைவருமே தந்தனர்.

இவ்வளவு இனாம்களும், பார்ப்பனருக்கும், அவர்கள் கட்டிவிட்ட கதைப்படி, எதெது புண்ய கைங்கரியம் என்று எண்ணப்பட்டதோ, அந்தக் காரியத்துக்கும், தரப்பட்டனவே தவிர, கண்ணிழந்தவன், காலிழந்தவன், கதிஇழந்தவன், ஆகியோரின் பராமரிப்புக்கு, அனாதைகளின் ரட்சகத்துக்கு, அபலைகளின் கஷ்ட நிவாரணத்துக்கு, என்று இப்படிப்பட்ட அவசியமான, காரியத்துக்கு, இந்த மன்னர்கள் 'இனாம்' வழங்கினதில்லை.

ஜெபமாலைக்குப் பயந்து இனாம்கள் வழங்கினர்.

இந்து மன்னர்கள் மட்டுமல்ல, இஸ்லாமியமார்க்க மன்னர்களும் கூட, வழங்கினர். வடாற்காடு மாவட்டத்திலே, நட்டேரி என்பது ஓர் இனாம் கிராமம்.

நஞ்சை, புஞ்சை, நிலங்கள் சேர்ந்து மொத்தத்தில் 4730 ஏகர் உள்ளன.

இந்தக்கிராமம், 128, பிராமணர்களுக்கு, 175 வருஷங்களுக்கு முன்பு, ஆற்காட்டு நவாப்பால், முழு உரிமையுடன் ஆண்டு அனுபவித்துக் கொள்ள, 'இனாம்' ஆகத்தரப்பட்டது.

நவாப்புக்கும், பிராமணர்களுக்கும், என்ன சம்பந்தம்? ஏன், அவர்களுக்கு 4730 ஏக்கர் பூமியை அவர் 'இனாம்' தந்தார் என்பது, நமக்குத் தெரியாது. தெரிந்து என்ன பலன்? ஏனோ கொடுத்தார்! இந்துமதக்கர்த்தாக்களான பிராமணர்கள், இஸ்லாம் மதத்தவரான ஆற்காடு நவாபு தந்த அந்த நிலத்தை, இன்றளவு வரையில் ஆண்டு அனுபவித்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

பார்ப்பனர்களுக்கு, அவர்களின் சொந்த நன்மைக்காக என்று வழங்கப்பட்ட 'இனாம்களே' இதிலே அதிகம்.

இனாம்தாரர்கள் பிரச்னைபற்றி சர்க்கார் ஆராய்ந்து, முன்பு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின்படி, பார்ப்பனர்களுக்கென்று (தானமாக) **254,473**, 'இனாம்கள்' தரப்பட்டுள்ளன; அதாவது, இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட சாசனங்கள், இனாம்கள், பார்ப்பனர்களுக்கு வழங்கப்பட்டவை.

கோயில், மடம், ஆகியவைகள் சம்பந்தமாக 79,196 இனாம்கள் உள்ளன.

கடவுள் காரியத்துக்கு, **79,196** இனாம்கள்.

பூதேவர்களின் சுகபோகத்துக்கு **254,473** இனாம்கள்!

சத்திரம், சாவடி, பூந்தோட்டம் கிணறு, வேதபாடசாலை, போன்றவைகள் நடத்துவதற்கு என்றுகுறிப்பிட்டுத்தரப்பட்ட இனாம்கள் 5600.

மற்றும் கிராமத்திலே மராமத்து, நீர்ப்பாசனம், அணைகட்டுவது, குளம்வெட்டுவது போன்ற பணி புரிவதற்காக என்று குறிப்பிட்டுத் தரப்பட்ட இனாம்கள் 6938.

கிராமக்காவல் வேலை முதலியனவற்றுக்காக 14,860;

கிராமத்து "ஊழியக்காரர்கள்" என்று பலவகை வேலைகள் செய்பவர்களுக்குத் தரப்பட்ட இனாம்கள் 6360.

ஆக, இனாம்தாரர்களின் தொகை தான் எவ்வளவு, யார் பார்த்தாலும் 'எனக்கு இனாம்பாத்யதை இருக்கிறது, இன்ன சாசனம் இருக்கிறது' என்று கூறிக்கொண்டு கிளம்புகிறார்களே! யார்தான், இனாம்தாரர், என்று சர்க்கார் ஆராய்ச்சிசெய்து, எவ்வளவு 'இனாம்கள்' உள்ளன என்று புள்ளிவிவரம் தொகுத்த போது,

**367,427**

இனாம்கள், வழங்கப்பட்டுள்ளன என்று முடிவு செய்தனர்.

367,427 இனாம்களில்,

254,473 இனாம்கள்

பார்ப்பனர்களின் சொந்தச் சுகத்துக்காகத் தரப்பட்டவை!! பாஷ்யமும் சாஸ்திரியும், ஏன் பதைக்கிறார்கள் என்பதற்கு, காரணம் ஆயிரம் காட்டுவானேன் — புள்ளி விவரம் பேசுகிறது!!

*

## தமிழ் நாடு இனாம் விவசாயிகள் மகாநாடு.

27—10—47 மாலை 4-30-க்கு சென்னை, புரசை, முத்தையசெட்டி உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

ரெவின்யு மந்திரி

**திரு. காளா. வெங்கட்ராவ்**

மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகிப்பார். ப. ஜீவானந்தம் சி. என். அண்ணாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்பர்கள்வருக.

திராவிட நாடு

காஞ்சி] 26—10—47 [ஞாயிறு

# பட்டம்—பதட்டம்

பட்டம் பெறுமுன்பு பணிவும், பெற்றுவிடப் போகிறோம் என்ற உறுதி பிறந்தானதும் முடுக்கும், வருவது—மன்னர்கள் விஷயமல்ல—அவர்கள் பணிவை எப்போதும் காட்டமாட்டார்கள்—ஜனநாயக கால முடிசூடா மன்னர்களின் போக்கு இது. கிளர்ச்சி நடைபெறும்போது, யாரிடமும் பரிவு எவரிடமும் பணிவு, எப்போதும் இலட்சியம், நாவிலே நர்த்தனமாடும்.

எவரெவர் என்னென்ன தேவை என்று கூறுகிறார்களோ, அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதாக, வாக்களிப்பர். சகலருடைய உரிமைகளையும், மதிப்பதாகப் பேசுவர். கிளர்ச்சிக்குப், பெரிய இலட்சிய பூர்த்திக்கு முதலில் அனைவரும் ஒன்று கூடி, அவரவர் சக்திக்கேற்ற அளவு, பணிபுரிவோம், நமது சொந்தப் பிரச்னைகள், நம்மிடையே எழும் சிறு விஷயங்களைப் பிறகு, சாவதானமாகத் தீர்த்துக் கொள்வோம்—நாமோ, ஒருவருக்கொருவர் பழக்கமுடைய, நேசமுடையவர்கள், நமக்குள்ளே தகராறு, எழாது, என்று பேசுவர்.

கிளர்ச்சி வலுத்துப், பலரும் தத்தமக்கென்றுள்ள குறைகளையும் மறந்து பொதுக்கிளர்ச்சியிலே ஈடுபட்டும், கனலிலே வீழ்வதானாலும், புனலிலே மூழ்குவதானாலும், சரி என்று உறுதி கூறிப் போரிட்டான பிறகு, பலன் கிடைக்குமென்று தெரிந்ததும், பட்டம் தனக்கு நிச்சயம் என்று தெரிந்ததும், பணிவு மறையும், முடுக்குப் பிறக்கும்.

ஜனநாயகத்திலே, மறைந்து கிடக்கும் மாபெரும் ஆபத்து இது. மாதவிபோல் மயக்குவதற்கும், பிறகு, காரியம் முடிந்ததும், கட்டைவிரல் கேட்ட துரோணர் போலாவதும் சகஜமாகிவிட்டது.

திருவாங்கூரில், பொறுப்பாட்சி வேண்டும், மன்னரின் எதேச்சாதிகாரம் ஒழியவேண்டும், திவானின் திமிராட்சி ஒழியவேண்டும், என்ற கிளர்ச்சி பத்தாண்டுகளுக்கு மேலாக நடைபெற்றது. பட்ட கஷ்டங்கள் பலப்பல. சர். சி. பி. அவிழ்த்து விட்ட அடக்குமுறை, கொஞ்சமல்ல. இவ்வளவையும் தாங்கித், திருவாங்கூர் மக்கள், உரிமைப்போர் நடத்தினர்.

பட்டம் தாணுப்பிள்ளை என்பவர் படைத்தலைவராக இருந்து, பணிவும் பரிவுமே உருவமெடுத்தவராக நின்றார் தர்பாருக்குஎதிராக. தரித்திரத்தின் தாக்குதலையும்சமாளித்துக் கொண்டு, மக்கள் போரிட்டனர்.

அந்தப்போர், வெற்றிதந்து விட்டது. தர்பார் பணிந்தது. திவான் வேதாந்தம் பயில மலையுச்சிபோய்விட்டார். மக்களைப், புதிய அரசியல் திட்டம் தயாரிக்கும்படி, மன்னர், கூறிவிட்டார்.

பட்ட கஷ்டம் வீண்போகவில்லை, பட்டம் இனி நமக்குத்தான் என்று, பட்டம் தாணுப்பிள்ளைக்குத் தெரிந்து விட்டது. உடனே, பழைய பணிவும் பரிவும் பறந்தோடி விட்டது, பதட்டம் தாணுப்பிள்ளையாக மாறிவிட்டார். ஏறத்தாழ, சர். சி. பி. யின், உருவம், அவருக்கு, ஏற்படத் தொடங்கிவிட்டது.

திருவாங்கூர்த் தமிழர் நிலை பற்றி, நாம், முன்பு விளக்கக் கட்டுரைகள் வெளியிட்டோம்.

நாஞ்சில் நாடு என்று புகழப்படும் பகுதியும், மற்றும் சில பகுதிகளும், திருவாங்கூர்ச் சமஸ்தானத்திலுள்ளன. அங்குள்ளவர்கள், தமிழர்.

அவர்களின், மொழி, வாழ்க்கை வழி, தொழில், அரசியல் உரிமை, எல்லாம், சமஸ்தானத்துக்கு, உரியவர்களான, மலையாளிகளின், தயவைப் பொறுத்து இருக்கிறது. இதுவரையில், அதாவது மன்னர் மட்டற்ற அதிகாரம் படைத்திருந்த நிலையை மாற்றி, மக்களுக்கு உரிமை இனி உண்டு என்ற புதுநிலை ஏற்படும் வரை, தமிழர்கள், தங்கள் நலனைப் பற்றியும் கவனியாமல், பொறுப்பாட்சிக் கிளர்ச்சிக்குப்பாடுபட்டனர், பட்டம் தாணுப்பிள்ளையின் தலைமையில்.

மன்னரிடமிருந்து மக்களுக்கு அதிகாரம் மாறின பிறகு, தமிழர்களின் உரிமைக்கும், வசதி செய்து தரப்படும் என்று மனப்பூர்வமாக, நம்பிக், கிளர்ச்சியில் தங்கள்பங்கைச் செலுத்தினர்.

இப்போது, தமிழர்கள், பொதுக் கொள்கை என்று ஒப்புக் கொள்ளப்படுவதும், பட்டம் தாணுப்பிள்ளையின் பரிவுக்குப் பாத்திரமான காங்கிரசின் கோட்பாடும் ஆகிய, மொழி வழி மாகாணம் அமைதல் வேண்டும் என்ற முறைப்படி, தமிழர்கள் வாழும் பகுதிகளைத், தமிழகத்துடன் இணைத்துவிட வேண்டும் என்று கேட்கின்றனர். இந்த உரிமைப் பேச்சு, பட்டம் பிள்ளைக்குக் காதிலே நாராசமாகிவிட்டது. அவர் ஆற்றிய உரிமை உரைகளை, மறந்து, தமிழரிடம் சீறுகிறார்.

தலைவர் சீறினால், மற்றவர் என் செய்வர்! தமிழர் கூட்டம் நடத்துமிடம் சென்று தாக்கினர்! போலீஸ் என்ன செய்தது? வேடிக்கைபார்த்தது! பட்டம் தாணுப்பிள்ளை சும்மா இருந்தாரா? அடிபட்ட தமிழர்களையும், சூறையாடப்பட்ட தமிழர் கடைகளையும் பார்வையிட்டார்!! "ஐயோ! பாவம்! திருவாங்கூர் மக்களோடு, தோளோடுதோள் சேர நின்று, சுதந்திரப்போர் நடத்திய தமிழர்களாயிற்றே, அவர்களை இப்படித் தாக்கலாமா?" என்று பரிவுடன் பேசினாரா? அது, பழையபட்டம்! இப்போது, புதுப்பதட்டம்!!

"தமிழர்களாம்! தமிழர்கள்!! இவர்களுக்குத் தனியான சங்கம் ஏன்? மலையாள ராஜ்யத்திலே மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். நாம் அனைவரும் மகாராஜாவின் பிரஜைகள்! இதிலே மலையாளிகள் பெஜாரடி. தமிழர்மைனாரடி. மைனாரடி, என்ன செய்யவேண்டும்? மெஜாரடி சொல்கிறபடி கேட்க வேண்டும்." இவ்விதம் பேசுகிறார், சர். சி. பி. வைத்துவிட்டுப்போன பாடபுத்தகத்தைப் படித்துவிட்டு.

தமிழர்களின் கிளர்ச்சியைச், சமஸ்தானக் காங்கிரஸ் அனுமதிக்காதாம்!!

முன்பு, சமஸ்தானக் காங்கிரசின் கிளர்ச்சியை, தர்பார் சகிக்காது, அனுமதிக்காது, அடக்கியே தீரும், என்று மன்னரும் அவர் பரிவாரமும் ஆர்ப்பரித்தது.

அப்போது, பணிவும் பரிவும்காட்டிப், பட்டம் தாணுப்பிள்ளை, தமிழர்களைப் படைதிரட்டினார், மக்களின் பொறுப்பாட்சிக் கிளர்ச்சிக்கு.

இப்போது, பதட்டமாகப் பேசுகிறார்.

கோளாம், ஏற்பட்டபிறகு, அதா

வது, கொச்சி திருவாங்கூர், ஆகிய இருசமஸ்தானங்களுக்குள் ஒரு ஒப்பந்தமும், பிறகு, சென்னை சர்க்காரின் நிர்வாகத்தின் கீழுள்ள மலையாளப் பகுதியும், அந்த இரு சமஸ்தானங்களும், ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு, ஐக்யகேரளம் ஏற்பட்ட பிறகு, தமிழர் விஷயம் கவனிக்கப்படுமாம்!!

எவ்வளவு,சுற்றிவளைத்துப்பேசித், தமிழரின் உரிமையைத் தட்டிக்கழிக்கப் பார்க்கிறார்! திருவாங்கூருக்குப் புது அரசியல் வகுக்கப்படும் நேரத்தில், சமஸ்தானத்துடன் முடிபோடப்பட்டுள்ள, தமிழ்நிலத்தைத், தமிழகத்துடன் சேர்க்காமல், மெஜாரடியாக மலையாளிகள் இருப்பதால் அவர்கள் இஷ்டப்படி, புதுத்திட்டம் தயாரித்துவிட்டுப், பிறகு,தமிழரின் விஷயத்தைக், கவனிக்க, மிச்சம் என்னவைக்கப்போகிறார்.

போராட்டத்தின் போது பெற்ற வீரர், தியாகி, விவேகி, என்ற புகழைக் கவசமாகவும், பொறுப்பாட்சி கிடைக்கப் போகிறது என்ற மன எழுச்சியுடன் உள்ள மலையாள மக்களின் ஒத்துழைப்பை வாளாகவும் கொண்டு, பட்டம் தாணுப்பிள்ளை, தமிழர்களின் உரிமைக் கிளர்ச்சியை ஒழித்துவிடக் கிளம்பிவிட்டார்.

'இந்தியயூனியனோ'—தன்னுடன் இணைந்துவிட்ட திருவாங்கூர் சமஸ்தானத்தின் மனதை நோகச்செய்யக்கூடாது என்று இருந்துவிடும்—தமிழரின் உரிமை பற்றியகவலை, டில்லிக்கு எப்படி ஏற்படமுடியும்? தமிழ்நாடு காங்கிரசின் போக்கு, எப்படி இருக்கும்? பொதுவாகவே, தமிழரின் போக்கு, இந்தப்பிரச்னையிலே, எப்படி இருக்கும்,என்பதைப் பொறுத்தே, திருவாங்கூர்த் தமிழர்களின் எதிர்காலம் இருக்கமுடியும்.

திராவிடநாடு கேட்கும் நாம், தமிழர்—மலையாளி—என்று பேதம் பேசுவது கூடாதே, எனவே, நமக்கு இந்தப் பிரச்னையிலே என்ன சம்பந்தம் இருக்கிறது என்று, நமது நண்பர்கள் சிலர் எண்ணுகின்றனர்.

இது தவறான போக்கு.

திராவிடநாடு, என்று கூறும் போது, நாம், மொழி வழி அமையும் தமிழகம், கேரளம், ஆந்திரம், என்ற தனி அரசுகள், தம்முள் ஓர் கூட்டாட்சி ஏற்படுத்துவதையும், அதுவும், வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதே நோக்கமாகக் கொண்டு, இக்கூட்டாட்சி கோருகிறோம் என்றும் கூறிவருகிறோம்.

இங்கே மட்டுந்தானே கூறுகிறீர்? அவர்களெல்லாம் ஆதரிக்கின்றனரா? —என்றெழும் கேள்விகள் நமக்குத் தெரியும்.

இதிலே வெட்கமென்ன, வெளிப்படையாகவே கூறுகிறோம், இன்னும் அங்கெல்லாம் சென்று, பிரச்னையை விளக்கி, ஆதரவு தேடக்கூடிய, நிலை, ஏற்படவில்லை.

செய்யாததாலேயே—செய்யமுடியாதது என்று கருதுவது நியாயமல்ல.

எனவே, திராவிடநாடு பிரச்னை, அங்கெல்லாம், எப்படிப்பரப்பப்படுவது என்று யோசனை கூறாமல், ஒத்துழைக்காமல், அங்கெல்லாம் ஏன் பேசவில்லை, அங்கெல்லாம் ஆதரவு இல்லையே! என்றுமட்டும் கூறினால், அவர்கள், நமது நிலையை நையாண்டி செய்கிறார்கள் என்று மட்டுந்தான் பொருள்படுமேயொழியப் பிரச்னை தவறு என்று நிரூபித்துவிட்டார்கள் என்று பொருள் இல்லை.

நையாண்டியைப்பற்றி நாம்கவலைப் படவில்லை; குறிப்பில்வைத்துக்கொள்கிறோம்.

பிரச்னையின் அடிப்படை, மொழி வழி அமையும் மாகாணத்துக்கு முரணல்ல.

எனவே தமிழகம், தனக்குரிய பங்கினை, எங்கெங்கு, அந்தப்பங்கு, எந்தக் காரணம் கொண்டு ஒட்டி வைக்கப்பட்டிருந்தாலும், திரும்பப் பெறத்தான் வேண்டும், என்பது, திராவிடர்கழகத்தின் திட்டத்துக்கு முரண் அல்ல.

ஆனால் எதை முதலில் செய்ய வேண்டும், வடநாட்டுத் தொடர்பை அறுக்கும்படி, திராவிடத்தைத் தயாரிப்பதா, அல்லது, திராவிடத்தில் மொழி வழி மாகாணங்கள் அமைவதற்கான பணி புரிவதா, எது முதலிடம் பெறுவது, என்பது, கூடிக் கலந்து பேசி முடிவுசெய்யவேண்டிய வேலைத் திட்டம்.

மேலும், பட்டம் தாணுப்பிள்ளை, தமிழ் நிலத்தைத் திருவாங்கூர் சமஸ்தானத்தில் பிணைத்துக் கொண்டு, திருவாங்கூரைத், திராவிடத்திலே, சேர்க்கவோ,வடநாட்டுத்தொடர்பை அறுத்துக்கொள்ளவோ விரும்புகிறாரா என்றால், அதுவும் இல்லை.

அவருடைய கண்கள் டில்லிமீதே உள்ளன.

இந்நிலையில், திராவிடநாடு என்ற திட்டம் கொண்டிருக்கிறோம் என்ற காரணத்துக்காகத், தமிழ் நிலத்தை அங்குள்ள தமிழர்களின்விருப்பத்துக்கும், நலனுக்கும் மாறாகச், சமஸ்தானத்துடன் சேர்த்துக் கொண்டு, அந்தச்சமஸ்தானத்தை, 'இந்திய யூனியனில்' சேர்த்துவிடும், பட்டம் தாணுப்பிள்ளையின் போக்கை, ஆதரிக்க முடியுமா? ஒரு போதும் கூடாது! திருவாங்கூர்த்தமிழர்களின் உரிமைக் கிளர்ச்சியை, நாம் ஆதரிக்க வேண்டியதே முறை!

பட்டம் தாணுப்பிள்ளை பதட்டம் தாணுப்பிள்ளையாகக் காட்சி அளிக்கும் மாறுதல், ஜனநாயகத்திலே மறைந்திருந்து, அந்தப் புனிதமான முறையையே மாய்க்கும்பேராபத்து. இதிலிருந்து தப்புவதற்கு, மக்களின் இடைவிடாத விழிப்பு, ஒன்றுதான் மார்க்கம். திருவாங்கூர்த் தமிழர்கள், அந்த விழிப்புப் பெற்று, வீறு கொண்டுள்ளனர். அவர்களின் கிளர்ச்சியை நாம் மனமார ஆதரிக்கிறோம்.

●

## நரபலி! நம் நாளில்!!

கிழக்குக்கோதாவரியிலுள்ள துனியைச் சேர்ந்த பி. சன்யாசி என்ற 9 வயதுப் பையன், காளிக்குப் பலி கொடுக்க முயலும்போது காப்பாற்றப்பட்டான். அவனைக் கொலை செய்ய முயன்ற தட்டபாயி வி. வெங்கட்டராமன் என்பவருக்குக் கிழக்கு கோதாவரிசெஷன்ஸ்ஜட்ஜ் 5வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தார். இதை எதிர்த்துத் தொடர்ந்த அப்பீல் வழக்கில் சென்னை நீதிபதி கோவிந்தமேனன் தீர்ப்பளிக்கையில் இந்தப் பயங்கரமான செயல் மிகவும் வெறுக்கத்தக்கதென்றும், நாகரிகம் படைத்த இந்தக் காலத்தில் இது மாதிரி சம்பவம் நவீன சமுதாயத்திற்கே இழுக்கென்றும், புராதனமான அந்தக் காலத்தில் சில காட்டுமிராண்டிகள் இந்த மாதிரி செயல்களில் மூடநம்பிக்கை வைத்திருந்தனர் என்றும், இதுபோன்ற குற்றங்களுக்கு இன்னும் கடுமையான தண்டனை விதிக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

# எண்ணிப்பார்...........

## கோபியாமல்!

எலக்ட்ரிக்
ரயில்வே
மோட்டார்
கப்பல்
நீர்மூழ்கிக் கப்பல்
அதைக் கண்டுபிடிக்கும் கருவி
டார்ப்பிடோ,
அதனின்றும் தப்பும் கருவி
விஷப்புகை
அதைத் தடுக்கும் முகமூடி
இன்ஜக்ஷன் ஊசி
இனுகுலேஷன் ஊசி
இவைகளுக்கான மருந்து
ஆப்ரேஷன் ஆயுதங்கள்
தூரதிருஷ்டிக் கண்ணாடி
ரேடியோ
கிராமபோன்
டெலிபோன்
தந்தி
கம்பியில்லாத் தந்தி
போட்டோ மெஷின்
சினிமாப்படம்எடுக்கும் மெஷின்
விமானம்
ஆளில்லா விமானம்
டைப் மெஷின்
அச்சு யந்திரம்
ரசாயன சாமான்
புதிய உரம்
புதிய விவசாயக் கருவி
சுரங்கத்துக்குள் போகக் கருவி
மலை உச்சி ஏற மெஷின்
சந்திர மண்டலம் வரைபோக
விமானம்
அணுவைப் பிளக்கும் மெஷின்

இன்னும், எண்ணற்ற, புதிய, பயன் தரும், மனிதனின் கற்பனைக்கே எட்டாதிருந்த, மனிதனின் உழைப்பைக் குறைக்கும். முறைகள், கருவிகள், பொருள்கள், ஆகியவைகளைக் கண்டுபிடித்தவர்கள், எல்லாம், இன்னமும், கண்டுபிடிக்கும் வேலையிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் எல்லாம்,

**சரஸ்வதி பூசை**
**ஆயுத பூசை**
**கொண்டாடாதவர்கள்!!**

அமெரிக்காவைக் கண்டுபிடித்த **கொலம்பஸ்**, இந்தியாவுக்கு வழி கண்டுபிடித்த வாஸ்கோடிகாமா, இந்தியாவை ஆதியில் ஜெயித்த அலெக்சாண்டர், இவர்களெல்லாம்,

**ஆயுத பூசை**

செய்தவர்களல்ல! நவராத்திரி கொண்டாடினவர்களல்ல!

நூற்றுக்கு நூறு பேர் என்ற அளவில் படித்துள்ள மேனாட்டிலே

சரஸ்வதி பூசை

இல்லை!

ஓலைக்குடிசையும் கலப்பையும் ஏரும் மண்வெட்டியும் அரிவாளும் இரட்டை வண்டியும் மண் குடமும் உனக்குத் தெரிந்த 'கண்டு பிடிப்புகள்.'

தீக்குச்சிப் பெட்டிகூட நீ செய்ததில்லை.

கற்பூரம்கூட, நீ செய்ததில்லை.

கடவுட் படங்களுக்கு அலங்காரத்துக்குப் போடும் கண்ணாடிகூட, சரஸ்வதி பூசை அறியாதவன் கொடுத்ததுதான். நீ, கொண்டாடுகிறாய்,

**சரஸ்வதி பூசை**

**ஆயுத பூசை!!**

ஏனப்பா? கொஞ்சம் யோசிக்கக்கூடாதா?

மேனாட்டான், கண்டுபிடித்துத் தந்த அச்சு யந்திரத்தின் உதவிகொண்டு, உன் பஞ்சாங்கத்தை அச்சடித்துப் படித்து, அகமகிழ்கிறாயே!

அவன் கண்டுபிடித்த ரயிலில் ஏறிக்கொண்டு, உன், பழைய, அற்புதம் நடைபெற்ற திருத்தலம் போகிறாயே!

அவன் கண்டுபிடித்துக் கொடுத்த ரேடியோவிலே, உன் பழைய பஜனைப் பாட்டைப் பாடவைத்து மகிழ்கிறாயே!!

ஒரு கணமாவது யோசித்தாயா, இவ்வளவு பூசைகள். செய்துவந்த, நாம், நமது மக்கள், இதுவரை, என்ன, புதிய, அதிசயப் பொருளைப், பயனுள்ள பொருளைக் கண்டுபிடித்தோம், உலகுக்குத் தந்தோம், என்று, யோசித்துப் பாரப்பா! கோபப்படாதே! உண்மை, அப்படித்தான், கொஞ்சம் நெஞ்சை உறுத்தும். மிரளாமல், யோசி—உன்னையு மறியாமல் நீயே சிரிப்பாய்.

உன், பழைய நாட்களில் இருந்த பேரறிஞர்கள் தங்கள் புண்ய நூற்களை எல்லாம்கூட, ஓலைச் சுவடியிலேதானே எழுதினார்கள். அந்தப் பரம்பரையில் வந்த நீ, அவர்கள் மறைந்து, ஆங்கிலேயன் வருவதற்கு இடையே இருந்த காலத்திலே அச்சு யந்திரமாவது கண்டுபிடித்திருக்கக் கூடாதா? இல்லையே!

எல்லாம், மேனாட்டான், கண்டு பிடித்துக் கொடுத்த பிறகு, அவைகளை, உபயோகப்படுத்திக் கொண்டு, பழைய பெருமையை, மட்டும் பேசுகிறாயே, சரியா? யோசித்துப் பார்!

சரஸ்வதி பூசை—விமரிசையாக நடைபெற்றது — என்று பத்திரிகையிலே 'சேதி' வருகிறதே. அது, நாரதர் சர்விஸ் அல்லவே! அசோசியேடட் அல்லது ராய்ட்டர் சர்விஸ்—தந்தி முறை—அவன் தந்தது!

தசரதன் வீட்டிலே டெலிபோன் இருந்ததில்லையே!

ராகவன், ரேடியோ கேட்டதில்லை.
சிபி, சினிமா பார்த்ததில்லை!
தருமராஜன், தந்திக்கம்பம் பார்த்ததில்லை!

இவைகளெல்லாம், மிக மிகச் சாமான்யர்களான நமக்குச் சுலபமாகக் கிடைக்கிறது—அனுபவிக்கிறோம்.

அனுபவிக்கும்போதுகூட, அந்த அரிய பொருள்களைத் தந்த அறிவாளர்களை மறந்துவிடுகிறோம். அவர்கள்

சரஸ்வதி பூசை
ஆயுத பூசை

செய்தறியாதவர்கள் என்பதையும் மறந்துவிடுகிறோம். ரேடியோவிலே ராகவனைப் பற்றிய பாட்டும், சினிமாவில் சிபிச் சக்ரவர்த்தி கதையும், கேட்டும், பார்த்தும், ரசிக்கிறோம். இது முறைதானா?

பரம்பரை பரம்பரையாக நாம் செய்து வந்த

சரஸ்வதி பூசை
ஆயுத பூசை

நமக்குப் பலன் தரவில்லையே, அந்தப் பூசைகள் செய்தறியாதவன், நாம், ஆச்சரியப்படும்படியான, அற்புதங்களை, அற்புதம் செய்ததாக நாம் கூறும் நமது அவதார புருஷர்கள் காலத்திலேகூட இல்லாத அற்புதங்களை அறிவின் துணைகொண்டு கண்டுபிடித்து விட்டார்களே, என்று, யோசித்தால், முதலில் கோபம் வரும், பிறகு, வெட்கமாக இருக்கும், அதையும் தாண்டினால், விவேகம் பிறக்கும்.

யோசித்துப் பார்—அடுத்த ஆண்டுக்குள்ளாவது!

சினிமாவிலே, முன்பு ஓர் வேடிக்கை பார்த்தேன், கவனத்திற்கு வருகிறது, சொல்கிறேன்.

ஒரு இரும்புப் பெட்டி! அதிலே, என்ன வைத்திருக்கிறான் என்றுஎண்ணுகிறாய்? வைரம், வைடூரியமா, தங்கம், வெள்ளியா? இல்லை! கத்தரி, வாழை, கீரைத்தண்டு, இப்படிப்பட்ட சாமான்களை!

ஒரு லோபி! அவன் இரும்புப் பெட்டியிலே, வைத்திருக்கிறான், இந்தச் சரக்குகளை. மனைவி, சமயலுக்காக வந்து கேட்கும்போது, இரும்புப் பெட்டியை ஜாக்ரதையாகத் திறந்து, கத்தரி ஒன்றும்

(14-ம் பக்கம் பார்க்க)

# தெரிந்து கொள்ளுங்கள்

—⊛—

ஜெமீன்ஒழிப்புக்குச்,சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலே, பெருவாரியான ஆதரவு கிடைத்தது. ஜெமீன்களை ஒழிப்பது பற்றி யாரும், ஒரு துளியும், குறைகூறவுமில்லை. மந்திரி காளா' வெங்கட்ராவ் ஒரு மாநாட்டிலே சொன்னதுபோல், 'அழுவாரற்று'ப் போயின இந்த ஜெமீன் கும்பல். ஆனால் அதே சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலே ஜெமீன் ஒழிப்புடன், இனாம் ஒழிப்பும் சேர்ந்த உடனே, எதிர்ப்பும் கண்டனமும், சதியும் புரட்சியும், மிரட்டலும் மேலிடத்துக்குத் தூதும், பலமாகிவிட்டன.

மந்திரிகளிலே, பிளவு மனப்பான்மை! பத்திரிகைகள், ஒன்றிரண்டு தவிர, மற்றவைகள் அவ்வளவும், இனாம்தாரர் பக்கம், கச்சையை வரிந்து கட்டிக்கொண்டுள்ளன. ஏன்? ஜெமீன்தாரர்கள், 'முக்காலே மூணுவீசம் முந்திரை' பார்ப்பனரல்லாதார். இனாம்தாரர்களிலே, பெரும்பாலானவர்கள், பார்ப்பனர்! எதிர்ப்புக்குக் காரணம், இதுதான். பார்ப்பனரின் சுகபோகத்துக்குக் கேடுகூட அல்ல, கொஞ்சம் ஆட்டம் கண்டுவிடும் என்றஉடனே, எவ்வளவு எதிர்ப்புக், கண்டனங்கிளம்புகிறது, என்பதைக் கவனியுங்கள்! காங்கிரசிலுள்ள தமிழர்களே! இந்த மனப்பான்மை கொண்டவர்கள், வகுப்புவாதிகள் அல்லவா, சுயஜாதி அபிமானம் கொண்டவர்களல்லவா! இவர்கள், இவ்வளவு பச்சையாகத் தங்கள் 'ஜாதி'க்கு உதவிசெய்ய ஜல்லடம் கட்டும்போது கூட, வகுப்புவாதி என்றுஇவர்களைக்கூற, உனக்கு மனம் வரவில்லை. ஆனால், அதே போது, ஜெமீன்தாரர்கள், பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்துக்காக, ஜெமீன் ஒழிப்புக் கூடாது, என்று, திராவிடர்கழகம் கூறவில்லை. ஜெமீன் முறை கொடியது-எனவே ஒழியத்தான் வேண்டும்—அந்த முறை ஒழிவதால், சில பார்ப்பனரல்லாத மேட்டுக்குடியினரின் வாழ்க்கை ஜொலிப்புக் கெட்டுவிட்டால், கேடொன்றில்லை-ஏழை, வாழ்வான்-அதுவே எமதுகுறிக்கோள்-ஆகவே, ஜெமீன் ஒழிப்பை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று திராவிடர் கழகம் கூறுகிறது. ஆனால், திராவிடர் கழகத்தை, வகுப்புவாதக்கழகம் என்று ஏசுகிறார்கள்! உண்மையிலே, வஞ்சனை மிக்க வகுப்புவாதச் செயல் புரிபவர்களைத்,தேசாபிமானிஎன்றும் கூறுகிறார்கள். ஏனோ இந்தப்போக்கு.

* * *

இந்தப் பிரச்னையின் காரணமாக, ஓரளவுக்குக் காங்கிரஸ் தமிழர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

ஜெமீன் ஒழிப்புக்குச், சட்டசபைக் காங்கிரஸ் கட்சி, பெருவாரியான ஆதரவு தந்தது, ஜெமீன்தாரர்கள், பெரும்பாலோர்பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்தால். அதே சட்டசபைக் காங்கிரஸ் கட்சி, இனாம்ஒழிப்புக்கு,எதிர்ப்புக் காட்டுகிறது, இனாம்தாரர்களில் பெரும்பாலோர், பார்ப்பனர் என்ற காரணத்தால்.

இந்தப் போக்கு வருந்தத்தக்க விளைவுகளை உண்டாக்கும்.

இனாம்தாரர்களுக்கு, விதிவிலக்கு அளிக்கக், காங்கிரஸ் மேலிடம் கூறுமானால், தென்னாட்டிலே, பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் பிரச்னை, பலமுள்ளதாகும்,

என்ற கருத்துள்ள, தந்தி, காங்கிரஸ் மேலிடத்துக்குத் தரப்பட்டிருக்கிறது. வகுப்புவாத ஸ்தாபனம், எதுவும் தரவில்லை. சென்னைக் காங்கிரஸ் கமிட்டியினர், தந்தி கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் நெஞ்சுறுதியும் நேர்மையும், பாராட்டுதலுக்குரியன. இவ்வளவு விளக்கமாக நிலைமை எடுத்துக் கூறின பிறகு, காங்கிரஸ் மேலிடம், இனாம்தாரர்களை ஆதரிப்பது என்று தீர்மானித்தால், நிச்சயமாக, அவர்களின் நோக்கம் பார்ப்பனப் பாதுகாப்புத்தான் என்று மூத்தூரங்கங்கள் கூட உணர்ந்து கொள்வார்கள்.

அவனுசிகள் கூட ஆத்திரமடைவார்கள்.

* * *

ஜாதிப்பற்றுக் காரணமாக, இனாம்தாரர்களை ஆதரிக்கப் பார்ப்பனத் தலைவர்கள் கிளம்பியது போலவே, தங்கள் செல்வாக்கு நீடித்திருப்பதற்கு, இனாம்தாரர் முறை இருந்தாகவேண்டும் என்று சில, பார்ப்பனரல்லாத தலைவர்களும் பாடு படுகிறார்கள். ஜெமீன், மடம், மிட்டா, மேட்டுக்குடி, இவற்றுக்கு, காவல் புரியவும், ஏவல் செய்யவும், கிளம்பியுள்ள சர்தார் வேதரத்னம் போன்றவர்கள், இனாம்தாருக்காகப் பரிந்து பேசுகின்றனர்.

தஞ்சை மாவட்டத்திலே, சுமார் 120 கிராமங்கள் உள்ளன, இனாம் முறைப்படி. இவை, சத்திரம், சாவடி, சமஸ்கிருத பள்ளிக்கூடம் போன்ற காரியங்களுக்காக, முன்னாளிலே இருந்த—மூளையில் மூடுபனி படிந்த முடிமன்னர் சிலரால், 'இனாம்' தரப்பட்டவை. மூளையில் மூடுபனி என்று கடுமையாகக் கூறுகிறோமே என்று கோபம் பிறக்கக் கூடும், சிலருக்கு. ஆனால், இதோ ஓர் எடுத்துக்காட்டு. இதைக் கவனித்துவிட்டுப் பிறகு கூறட்டும், நாம் கூறினது கடுமையான வார்த்தையா என்பதை.

* * *

மிரட்டேர் என்றோர் இனாம் கிராமம் இருக்கிறது. பார்ப்பனர்களுக்கு இனாம் தரப்பட்டது. இந்த இனாம் ஏன் தரப்பட்டது என்ற காரணத்தைக் கண்டால், வேடிக்கையும் வேதனையும் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டோடி வரும்.

எப்போதோ ஓர்முறை, சிலபார்ப்பனர்கள், 'வருண ஜெபம்' செய்தார்களாம்; மழை பெய்ததாம். உடனே மன்னன், மழையை வரவழைத்த மகானுபாவர்களுக்கு, இந்தக் கிராமத்தை 'இனாம்' தந்தானாம். மழைக்கும் மந்திரத்துக்கும் சம்பந்தமிருப்பதாக எண்ணின மன்னனை, மூளையிலே மூடுபனி உள்ளவன் என்று கூறுவது தவறு!

இப்படித்தான் இருக்கும், பல இனாம்களின், யோக்யதைகளை அலசினால். இவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று, நண்பர் நாடிமுத்துவும் ஓடி ஆடிப் பாடுபடுகிறாராம். ஏனென்று கேட்டேன், ஒரு இனாம் குடியை. "இது தெரியவில்லையா! தஞ்சாவூர் மாவட்டத்திலே நூறு கிராமங்களுக்கு மேல் உள்ளன, இப்படி இனாம்கள். எல்லாம், ஜில்லா போர்டு, சத்திரம் பரிபாலன இலாக்காவின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகிறது. இனாம் குடிக

ளிடம், குத்தகைகள் எழுதி வாங்க, குத்தகைக்குவிட, அதை ஒட்டிய பல நிர்வாகக் காரியங்களைக் கவனிக்க, ஜில்லாபோர்டுக்கு அதிகாரம் இருப்பதால், அதைக்கொண்டு, ஜில்லாவிலே, தேர்தல் சம்பந்தமாகத், தனக்குச் செல்வாக்கு தேடிக்கொள்ளலாம், என்பது நாடிமுத்து அவர்களின் நோக்கம். இப்போதும், நாங்கள், சொந்தத்தில் எந்தக் கொள்கை கொண்டிருந்தாலும், நாடிமுத்து விடம் கட்டுப்பட்டிருக்கிறோம்; இந்தக் காரணத்தாலேதான். இந்தச் செல்வாக்குப் போய்விடுமே, என்ற பயம் அவருக்கு. ஆகவேதான் அவர் இனாம்தாரர்களின் சார்பாகப் பேசுகிறார்" என்று கூறினர். தேசபக்தர்களின் திருநோக்கமும் திருவிளையாடலும், எப்படி எப்படி இருக்கிறதென்பதைக் கவனியுங்கள்.

* * *

ஒரு M. L. A.—தஞ்சை மாவட்டத்தார்—இனாம் குடிகள் அவரைக் கண்டு, பேசினார்களாம். அவரும், "ஆமப்பா! எனக்குத் தெரியாதா இனாம் குடிகள் படுகிற கஷ்டம். ஜெமீனில் இருப்பதுபோலத்தான், இனாமிலும் இருக்கிறது. நான் உங்களைப்போல ஏழைதானே. எனக்கு உங்கள் கஷ்டம் தெரியும்" என்று பரிவுடன் பேசினாராம். பேசினது மட்டுமல்ல, இனாம் குடிகளின் குறைபாடுகளை விளக்கும் குறிப்பையும், ஜெமீன்களை ஒழிப்பது போலவே, இனாம் முறையையும் ஒழித்தாக வேண்டியதன் அவசியத்தையும் விளக்கிடும் அறிக்கையையும் இனாம் குடிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு போய், மசோதாக் கொண்டுவரும், மந்திரி காளா வெங்கட்ராவிடம் கொடுத்தாராம். ஆனால் இனாம் குடிகள் சார்பாக இருந்த இதே M L.A; சில தினங்களுக்குள், 'கரணம்' போட்டுவிட்டார்! இனாம்தாரர்களை ஒழிக்கக்கூடாது, அது மகா பாபம், என்று சில M. L. A.—க்கள் கையொப்பமிட்டுவெளியிட்ட அறிக்கையிலே, இவரும் கையொப்பமிட்டார். "ஏன் இந்தக் 'கரணம்' அடித்தீரய்யா!" என்று மனம் நொந்து, இனாம் குடிகள் கேட்டபோது, M. L. A. என்ன சொன்னாராம் தெரியுமா?

"நானாகவா 'கரணம்' போட்டேன். என்ன செய்வேன். அவர் (வேறு ஒரு பிரபல M. L. A. யின் பெயரைக் கூறி) போடச் சொன்னார், போட்டேன். போடாவிட்டால் முடியுமா? நான் அவருக்குக் கட்டுப்பட்டுத்தானே நடக்கவேண்டும். என் நிலைமை உங்களுக்குத் தெரியாதா" என்று ஒரு மூச்சு அழுது தீர்த்தாராம். இப்படி இருக்கிறது,இந்த M. L. A.க்களின் போக்கு. மந்திரி காளா வெங்கட்ராவே, மனவேதனையுடன் இருக்கிறாராம். "நான், எதிர்பார்க்கவே இல்லை, இவ்வளவு எதிர்ப்பு ஏற்படும் என்று"—எனச் சொல்லிச்சோகிக்கிறாராம். ஆனால் அந்தச் சோகத்தினூடே ஓர் உறுதியும் தெரிவித்தாராம். என்னாலான வரையில் போராடத்தான் போகிறேன். சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலே, யார் என்னைக் கைவிட்டு விட்டாலும் சரி, ஒரே ஒரு அதிகப்படியான ஓட்டு கிடைத்தாலும் சரி, மசோதாவை, வெற்றி பெறச் செய்யவே முழு மூச்சாக வேலை செய்வேன். இவ்வளவுக்கும் பிறகு என் முயற்சியை முறியடித்து விடுவார்களானால், நான் மந்திரி சபையிலே ஒட்டிக்கொண்டிருக்க மாட்டேன் — ராஜிநாமாச் செய்து விடுவேன்-என்றாராம். அந்த உறுதி, பாராட்டுதலுக்குரியது.

* * *

காளா கொண்டுவரும், மசோதாவை, யாரோ சில கம்யூனிஸ்டுகளும் ஆந்திரர்களும்தான் ஆதரிக்கிறார்கள். இனாம்தாரர், தமிழ் நாட்டிலேதான் அதிகம். தமிழ் நாட்டிலேயோ, காளாவின் மசோதாவுக்கு ஆதரவு இல்லை என்று, ஓர் வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இது விஷமத்தனமானது என்பதை விளக்கவும், இனாம்தாரர் ஒழிப்புக்குத் தமிழகம், ஆதரவு தருகிறது என்பதைத் தெரிவிக்கவும், தமிழ்நாடு இனாம் குடிகள் மாநாடு சென்னையில், இம்மாதம் 27ந் தேதி நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது. மந்திரி காளா வேங்கட்ராவ் வருகிறார். சிவஞானம், ஜீவானந்தம், அண்ணாதுரை, ஆகியோர், இதிலே கலந்துகொள்ள இருக்கிறார்கள். மடாதிபதிகள் முகாமை முறியடிக்க, மக்கள் முகாம் அமைக்கும், இந்த நன்முயற்சி, காலமறிந்து செய்யப்படுவதாகும்.

இதற்கிடையில், மயிலை வக்கீல்கள் சட்டப்புத்தகத்தைப் புரட்டியவண்ணம் உள்ளனர். பாபாய் வக்கீல் முன்ஷியிடம் சிலரும், ஆச்சாரியாரிடம் வேறு சிலரும், சர். கோபாலசாமி ஐயங்காரிடம் சிலரும், ஓடியிருக்கிறார்களாம். இந்த இனாம் தாரர் மசோதா, இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்ற அளவுக்கு, வேற்றுமை உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டு விடுமோ, என்று அஞ்சக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை பற்றிய பேச்சு, எங்கு, எந்த உருவில், யாரால் பேசப்பட்டாலும், ஒவ்வோர் ஐந்து நிமிஷத்துக்குப் பிறகும், "அதுதானே ஐயா அந்த ஈரோட்டுப் பெரியார், இவர்களைக் கண்டித்த வண்ணம் இருக்கிறார். அவர் சொல்கிறபடிதானே நிலைமை இருக்கு. பார்ப்பனர்களுக்கு ஒரு துளி இலாபம் குறைகிறது என்றாலும், இமயமலையிலிருந்துகன்னியாகுமரிவரையிலே, பார்ப்பனர்கள் ஒன்று கூடி விடுகிறார்கள்." என்று பேசுகின்றனர்.

✵

12-ம் பக்கத் தொடர்ச்சி

வாழையில் கால் பாகமும், தருகிறான்! பிறகு, பெட்டியைப் பூட்டிவிடுகிறான்.

காய்கறியின் விலை என்ன, அதை வைத்துப் பூட்டி வைத்திருக்கிறானே இரும்புப் பெட்டி, அதன் விலை எவ்வளவு!

அவன் யோசிக்கிறானா அதை.

அதுபோலத்தான், மேனாடு, அறிஞர்கள் கொடுத்த இரும்புப்பெட்டி போன்ற விஞ்ஞான சாதனத்துக்குள்ளே, நாம், நமது, பழைய கருத்துகள், முறைகள், பூசைகள், ஆகிய, சில்லறைகளை வைத்துக்கொண்டு காலந் தள்ளுகிறோம்.

எனக்கு நன்றாகக் கவனமிருக்கிறது, சினிமாவிலே, இந்தக்காட்சியைக் கண்ட உடனே கொட்டகையிலேஇருந்தவர்கள், அட! பைத்யக்காரா! என்று கேலி செய்தனர் அவனை.

நமது போக்கைக் கண்டு, உலகக் கொட்டகையிலே எவ்வளவுபேர், கேலி செய்கிறார்களோ? யார் கண்டார்கள்? செய்யாமலா இருப்பார்கள்?

நாம் கட்டிக்கழித்த துணியை, ஒட்டுப் போட்டு, ஓரம் தைத்துப், போட்டுக் கொண்டு ஒரு ஆள், நம்மிடமே வந்து நின்று, 'புதுசா ஜவுளிக்கடை வைத்திருக்கிறேன்—அருமையான துணிகள் இருக்கு நம்ம கடைக்கே வாங்க'—என்று நம்மையே, அழைத்தால் நமக்கு எப்படி இருக்கும்............?

4-ம் பக்கத் தொடர்ச்சி

கும் என்று எண்ணுவது பேதைமை. மதத்தின் பெயர் கூறி மக்களை ஆட்டிப்படைக்கும் இவர்களின் ஆதிக்கத்தைத் தொலைத்தாக வேண்டும் என்று சுயமரியாதைக்காரர்கள் சொன்னபோது, கோபம் கொண்டு, கொதித்து, மாபாவிகள்! மதத்துரோகிகள்! என்றெல்லாம் ஏசினர். நண்பர்களே! இதோ இன்று நீங்கள் காண்பது என்ன? பற்றற்ற பரப்பிரம்ம சொரூபிகள் என்று எவரை நீங்கள் புகழ்ந்தீர்களோ, அவர்கள், பதைக்கிறார்கள், தங்கள் சொத்திலே ஒருபகுதி, போய்விடுகிறதே என்று! பிரபஞ்சமாயையையும், செல்வத்தின் நிலையாமையையும், பந்த பாசங்கள் அறுபட வேண்டிய தன் அவசியத்தையும், அகவலாகவும் வெண்பாகவும், அறுசீராகவும், எழுசீராகவும், அம்மானையாகவும் அந்தாதியாகவும், தேவாரமாகவும் திருவாய் மொழியாகவும், எடுத்துக்கூறி வந்தவர்கள், மகஜர், மனு, தீர்மானம், பேட்டி, அறிக்கை, கண்டனம், மாநாடு, என்று தமது போர் முறையை மாற்றிக் கொண்டனர்! இந்தக் காட்சியைக் காணும் போதாவது, இவர்களின் யோக்யதையை முன்கூட்டியே சுயமரியாதைக்காரன் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது என்று எண்ணுவீர்கள் அல்லவா!

சொத்து, சுகம், ஆகியவைகளிடம் இவர்களுக்கு ஏன் இவ்வளவு பற்று இருக்கவேண்டும்? ஆயிரம் வேலி நிலமில்லாவிட்டால், இவர்கள் அம்மையப்பன் அருள் பெற முடியாதா! ஆகமத்தை அறியமுடியாதா! இகத்தைப்பற்றிய கவலை, இவர்களுக்கு ஏன்? பரமன்றோ முக்கியம்! இவ்வளவு பதைப்பு உண்டாகலாமா? சொத்துப் போய்விடுமே, சுகம் கெடுமே, என்ற ஆத்திரமும் விசாரமும் ஜெமீன்தாரர்களுக்கு ஏற்பட்டால், ஆச்சரியமில்லை. அவர்கள் பஞ்சேந்திரியங்களெனும் பைசாசத்தால் ஆட்டிவைக்கப்படும் பாபாத்மாக்கள், இவர்கள் நிலை அஃதல்லவே! இவர்கள் மும்மலம் நீக்கப்பட்ட, மூலத்தை உணர்ந்தவர்களாயிற்றே! இப்போது மூக்குச்சிவந்துவிடுகிறதே, இனாம்கள் ஒழியும்என்ற 'சேதி' கேட்டு. இவர்களின் இலட்சணம் இது வென்று இந்தச்சந்தர்ப்பத்திலாவது தெரிந்துகொள்ள முடிகிறதே மக்களால், அதுவும், ஓர் நன்மைக்கே! இவர்கள், சைவவைணவ முலாம் நீக்கப்பட்டுப், பச்சை முதலாளிகளாய், சுயநலமிகளாய்க்காட்சி அளிக்கின்றனர் பாரீர். இவர்களைத் தாம், நாம், குருவாக, ஆச்சார்ய புருஷர்களாக, ஞானமார்க்க போதகராக நம்பி வந்தோம்! நாதனின் நல்லருளைப் பெற்றவர்களென்று நாவாரப் போற்றினோம். இன்று அவர்கள், மிகமிகச் சாதாரணச் சுயநலக்காரரைவிட, மட்டரகமாகக் காட்சி அளிக்கின்றனர். மாரடித்து அழுகின்றனர், தங்கள் சொத்துப் போகிறதே என்று. எங்கே போய் விடும் அந்தச் சொத்து? எஸ்கிமோ நாட்டவனுக்கா! இங்கிலாந்துக்கா! இங்கே, தலைமுறை தலைமுறையாக, உழைத்து உருக்குலைந்து கிடக்கும், ஏழை மக்கள் ஈடேற, முழுவாழ்வு பெற, இந்த எத்தர்களிடம் சிக்கியுள்ள பொருளைப் பயன்படுத்தப் போகிறார்கள். இதுகண்டு சகிக்க முடியவில்லை இவர்களால்! மக்கள் யாரை, மகான்களென்று தவறாக எண்ணிக்கொண்டிருந்தார்களோ, அவர்கள், மக்கள் நலனை மதிக்க மறுக்கும், மாமிசப் பிண்டங்களாகக் காட்சி தருகின்றனர். மடாதிபதிகள் மாநாடு, அத்தகைய காட்சி! மக்களைப்புறக்கணிக்கும் மகானுபாவர்களின் மாநாடு! தைரியமாக நடைபெற இருக்கிறது சென்னையிலே!

கோயில் மரியாதைகளுடன், கொட்டு முழக்குடன், கூடுவர், அங்கு சென்று, நெட்டுருப் போட்ட சட்ட விஷயத்தைக் கொட்டி அளக்கும் மயிலைக் கும்பல்! சுயமரியாதைப் பிரசாரம், இவர்களின் யோக்யதையை ஓரளவுக்கு நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளும்படி செய்திருந்துங்கூட, இன்று அவர்கள், மயிலை வக்கீல்களின் தயவைக்கொண்டும், காங்கிரசிலுள்ள வைதீகர்களின் ஆதரவைக் கொண்டும், தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ளலாம் என்று நம்புகிறார்கள்.

இந்நிலையில், தீவிரவாதிகளின் கடமை என்ன? அவர்கள் எந்தச் சட்டையிலே உலவினாலும் சரி, எந்தக்கொடியின்கீழ் இருப்பினும் சரி, எல்லை அவர்களுக்கு எதுவரை இருப்பினும் சரி, இந்த முற்போக்கைத்தடுக்கும் முட்டுக்கட்டையினை முறியடிக்க, ஏன் ஓர் முகாம் ஏற்படுத்தக்கூடாது. நாட்டிலுள்ள நல்லறிவாளர்கள், இந்த ஆதீனங்களின் ஆர்ப்பரிப்பை அனுமதிக்கலாமா? கட்சிகளையும் கடந்து, கடமை உணர்ச்சியும், காரியமாற்றும் திறனும், கொண்ட ஓர் அணிவகுப்புத் தமக்கு எதிராகக் கிளம்புகிறது என்று தெரிந்தால், இந்த மடாதிபதிகள், இனாம்தாரர்கள், இவ்வளவு தைரியமாகக் கிளம்புவரா? மயிலை வக்கீல்கள்தான், தாங்கள் கற்றதைக் கொட்டி அளக்கும் போக்குக்கொள்வரா! கட்சிகளாகப் பிளவுபடுத்திவிட்டோம், ஒவ்வொரு கட்சிக்குள்ளும் நமது உளவாளிகளையும்புகுத்திவிட்டோம், எனவே ஒன்றுபட்டு நமது ஆதிக்கத்தை அவர்கள் எப்படி எதிர்க்கமுடியும், என்றல்லவா, ஆதிக்கக்காரர்கள் எண்ணுகின்றனர். காங்கிரசிலே ஒரு காளா நம்மை ஒழிக்க வேண்டுமென்றால், ஒரு ஓமாந்தூரார் ரட்சிக்கிறேன் என்கிறார், நமக்குப்பயம் ஏன், என்றல்லவா அவர்கள் எண்ணுகிறார்கள். இந்தச்சமயத்திலேதான், நாட்டிலே புதியநிலை காணவேண்டுமென்று கருதும், தீவிரவாதிகள், ஒன்றுகூடி, இந்த இனாம்தார் விஷயத்திலே நாங்கள் ஒன்றுபட்டிருக்கிறோம்—இதிலே ஓரே முகாமில் நிற்கிறோம்— என்று தெளிவாகத் — திட்டமாக, உறுதியுடன், கூறவேண்டும். மக்களின் எழுச்சிக்குரல் கிளம்பாத காரணத்தாலேதான், மடாதிபதிகள் மாநாடு கூட்டமுனைகின்றனர். மக்களின் அணிவகுப்பு-இதற்கான தனியானஓர் அணிவகுப்புக்கிளம்புகிறது என்று அவர்களுக்குத் தெரியுமானால், அவர்கள் அரியணையானையும்ஆலவாயப்பனையும் துணைக்கு அழைப்பதோடு நின்றுவிடுவார்கள், அல்லாடிகளையும் சாஸ்திரிகளையும் அழைக்கமாட்டார்கள்— அஞ்சுவர் மாநாடுகூட்ட! ஆனால், தீவிரவாதிகள் ஒன்று கூடாததால் அவர்கள் தங்கள் ஆதிக்கம் இன்னும் கொஞ்சநாட்களுக்கு நடைபெறும் என்று எண்ணுகின்றனர். மக்களின் உரிமைகளையும் நலன்களையும் மண்ணென மதிக்கிறார்கள். அவர்களின் ஆதிக்கத்தில் கை வைப்பதுமதத்தை கெடுப்பதாகும், என்று வைதிகர்கள் கூறுகின்றனர். இந்த மனப்பான்மையை மண்டை சிதற அடித்து, மக்கள் சார்பிலே பேச, ஓர் அணிவகுப்பு இல்லை! ஏன்? எங்கே அந்த அணிவகுப்பு?

# பர்மாவில் முடியரசு?

இந்தத் துணைக்கண்டத்திலே, இப்போதும் நவாபுகளும், ராஜாக்களும், தங்கள் தர்பார் நடைபெற வேண்டுமென்பதற்கான தந்திரங்களை எல்லாம் செய்துகொண்டு தான் உள்ளனர்.

மக்களுக்கு, உரிமையை, அவ்வப்போது, சிறுசிறு துண்டுகளாக வீசினால் போதும், கிளர்ச்சி அடங்கிவிடும் என்று நம்புகிறார்கள்.

ஆனால் பர்மாவிலே, ராஜகுடும்பம், எப்படி இருக்கிறது? அங்கு முடி அரசு, மீண்டும் ஏற்பட முடியுமா? ராஜகுடும்பத்தினர், ஏதேனும் முயற்சிகள் செய்கின்றனரா?

இந்த நிலைமையைக், கீழே வெளியிட்டுள்ள கட்டுரை, விளக்குகிறது. அண்டை வீட்டு நிலைமையை நாம் அறிந்து கொள்வது நல்லதல்லவா! அங்கு 'ராஜாக்கள்' இருக்கிற நிலையுடன், ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும இங்குள்ள ராஜாக்களின் நிலைமையை.

* * *

மறந்துபோகப்பட்ட பர்மிய ராஜகுடும்பம், பிரிட்டிஷார் வெளியேறினவுடன் முடியரசு ஸ்தாபிக்க வேண்டுமென்று கோருகிறது. பர்மா சுதந்திரம் பெறவிருக்கும் இத்தருணத்தில் இவ்வியக்கம் பர்மிய மக்களிடையே மிகக் குறைந்த செல்வாக்கையே பெற்றிருக்கிறது. பர்மாவின் கடைசி மன்னர் இந்தியாவில் அஞ்ஞாதவாசம் செய்யும்போது உயிர் துறந்தார்.

ஜனங்களின் பெரும்பான்மையோர் அரசியல் நிர்ணய சபையின் தீர்ப்பான, பிரிட்டிஷ் வெளியேறினபின் பர்மிய குடியரசு அமைப்பது என்பதை ஆதரிக்கின்றனர்.

தீபா மாளிகையின் ராஜகுடும்பத்தினர் தங்கள் சொந்தக் கட்சியை அமைத்துள்ளனர். 'மன்னர்குடும்பப் பின் சந்ததியார்களின் சங்கம்' என்பது அக்கட்சியின் பெயர்.

இச் சங்கத்தின் தலைவர் பியின் மாணவின் இளவரசராகும். இவருக்கு வயது 70. தீபா மன்னரின் மருமகன் கடைசியாக மண்டலேயை ஆண்ட பர்மிய மன்னர் தீபா ஆகும். மேற்சொன்ன சங்கத்திற்கு ஒரு பொக்கிஷதாரும், அதிகாரிகளும்—ஒரு தொழிற் சங்கத்தைப் போல் இருக்கின்றனர்.

இந்த ராஜகுடும்பச் சங்கம் தாய் நாட்டிலும், லண்டனிலும் சுறுசுறுப்பாக வேலை செய்கிறது. ஆனால் அதன் போராட்டம் மிகவும் குறைந்த பிரசாரத்தையே பெற்றிருக்கிறது.

ரங்கூனில் பர்மிய அதிகாரம் மாறும் இச்சமயத்தில் ராஜகுடும்பம் எவ்வித பிரகடனமும் செய்யவில்லை. அக்காலம் கௌரவிக்கப்பட்ட முடியரசை மீண்டும் ஸ்தாபிக்க வேண்டுமென்று ராஜகுடும்பம் ஜனங்களிடம் விண்ணப்பித்துக் கொள்ளவில்லை. ஆனால் சில மாதங்களுக்கு முன் இந்த மன்னர் கோஷ்டி பாஸிஸ எதிர்ப்பு மக்கள் சுதந்திர லீகிற்கு ஒரு கடிதம் எழுதினது. அக்கடிதத்தில் பர்மிய நிர்வாக சபையிலிருந்து லீகினர் ராஜினாமா செய்யவேண்டுமென்று கேட்கப்பட்டிருந்தது. காரணம் அவர்களுக்கு உண்மை அதிகாரமில்லையென்று கூறப்பட்டிருந்தது.

60 வருஷங்களுக்கு முன் பிரிட்டிஷ் அரசாங்கம் யாரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றினதோ, அவர்களிடமே, பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியேறும்போது ஒப்படைக்க வேண்டுமென்று ராஜ குடும்பம் வற்புறுத்தினது. முடியரசுசம்பந்தமாகப் பொதுஜன வாக்கெடுக்கும்வரை நிர்வாகத்தை ராஜ குடும்பமே நடத்தும் என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

அதிகார மாற்றத்தைப்பற்றி ராஜகுடும்பம் விடுத்த அறிக்கைக்கு பர்மா மந்திரி காரியாலயம் இன்னும் எவ்வித பதிலும் கொடுக்கவில்லை. சிரத்தை காட்டவுமில்லை.

பர்மாவில் இந்த முடியரசு இயக்கத்தின் மூல புருஷராயிருப்பவர் மேகாராகமானி இளவரசர். இவருக்குவயது 42. இவர்காலஞ்சென்ற மின்டன்அரசருடைய பேரன்மகனாகும். இவர் ராஜகுடும்பச் சங்கத்தின் காரியதரிசி. சிம்மாதனத்தைத் தங்களுக்களிக்கும்படி கோருவதும், தன் பந்துக்களுக்குப் பென்ஷன் கோருவதும் இவருடைய யோசனைகளேயாகும்.

கமானி இளவரசர் ராஜகுடும்பத்தைப்போல் காணப்படமாட்டார். இவர் தன் முன்னோர்களைப்போல் பட்டுவஸ்திரங்களைப் பளபளவென்று மினுக்கும்படி அணிவதில்லை. தலையில் முடி அணிவதில்லை. பர்மிய கோர்ட்டின் சட்ட திட்டமான பாஷையிலும் அவர் பேசுவதில்லை. இவர் ஒரு சாதாரண பர்மியரைப் போல் காணப்படுகிறார்.

கமானி இளவரசர் அதிக தேவையில்லாதவர். ரங்கூன் வட்டகையில் ஒரு சிறுகூரைக் குடிசையில் அவர் வாழுகிறார். பர்மாவிலிருந்து நாடு கடத்தப்பட்டு இந்தோசீனாவிலிருக்கும்போது தன் மனைவியை இழந்தார். இப்பொழுது அவருடைய 82 வயதான தாய், வீட்டு வேலைகளைக் கவனிக்கிறார்.

பர்மிய ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு டஜன் பேர்கள் ரங்கூனிலிருக்கின்றனர். இவர்களில் நல்ல நிலைமையிலிருப்பவர், ஒரு ஆஸ்திரேலிய புத்தகக்காரரை மணந்த ஒரு இளவரசியாகும்.

பர்மாவின் எதிர்காலத்தில் முடியரசுக்கு இடமில்லை. ரங்கூனிலும் இதர ஜில்லாக்களிலும் ராஜ வம்சம் கவனிக்கப்படாமல் அலைகிறது. ஆனால் மாந்தளே பகுதியில் அநேக ஜனங்கள் இன்னும் பழைய ராஜகுடும்பங்களைக் கௌரவிப்பதாகச் சொல்லப்படுகிறது.

பல வருடங்களுக்கு முன் பர்மியர்கள் டொபாயன் (எங்கள் ராஜா சங்கம்) என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்தனர். இதன் தலைவர் ஒரு சமயம் பர்மிய ரெவின்யூ மந்திரியாயிருந்த யுபாவுஆகும். இந்தச் சங்கம் இப்பொழுது மறைந்துவிட்டது. ஆனால் பொதுஜன வாக்கெடுத்தால் வட பர்மாவில் அநேகர் முடியரசுக்கு ஓட்டளிக்கலாமென்று நம்பப்படுகிறது.

பர்மிய மக்கள் பொதுவாக முடியரசில் நாட்டமில்லாதவர்களாயிருப்பினும், பர்மிய எல்லைப்புற பிரதேசங்களிலுள்ள தலைவர்கள் பர்மா யூனியன் தலைவராக ஒரு ராஜாவைத் தேர்ந்தெடுக்க விரும்புவார்கள் என்று சில பர்மிய அரசியல் வாதிகள் அறிவிக்கின்றனர்.

## அமைச்சருக்கு ஓர் அறிவுரை

பள்ளிக்கூடத்திலே பாசிச முறையைப் புகுத்தும் வகையிலே, ஆசிரியர்களுக்குப் புதியதோர் தடை போட்டு, அவர்கள் மதத்தைக் கண்டித்துப் பேசுவதாகத் தெரிந்தால் போதும், அவர்களை வேலையைவிட்டு நீக்கிவிடலாம், என்று உத்தரவு பிறப்பித்திருக்கும் கல்வி அமைச்சர் அவினாசியாருக்கு, இலக்கியம் எனும் செந்தமிழ் இதழ் தரும், அறிவுரையிலோர் பகுதியை இங்கு வெளியிடுகிறோம்; அமைச்சரும் அவர் தம் நண்பரும் பயன் பெறுவாராக.

"தமிழர்கள் பண்பாட்டுக்கும் கோள்கைக்கும் மாறானதே இன்று தமிழர் சமயமாகக் கருதப்பட்டு வருகின்றது. போலிச் சமயக்கோள்கையை மாணவர் மனத்திலிருந்து அகற்ற வேண்டியது ஆசிரியர்கள் கடமை. இன்றுள்ள தமிழ்ப்பாடங்களில் பல, மூட நம்பிக்கையை வளர்ப்பனவாயும் போலிச் சமயத்தை ஆதரிப்பனவாயும் இருக்கின்றன. அவைகளை விளக்க வேண்டியது ஆசிரியர் கடமை என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வாய்ப் பூட்டுச் சட்டத்திற்கு அஞ்சி உண்மை நிலையை உரைக்காது போயினும் மாணவர்கள் விடார். பத்தாண்டுக்கு முன்பிருந்த மாணவ நிலைமைவேறு. இன்றுள்ள நிலைமை வேறு. ஆசிரியர்கள் கூறுவனவற்றை யெல்லாம் சித்திரப் பாவையைப்போல் கேட்டுக்கொண்டிருக்கும் நிலை இன்று இல்லை. கல்வி முறையும் அப்படி அமையவில்லை. மாணவர் கேட்கும் ஐய வினாக்களுக்கு உண்மையான முறையில் விடையளிக்க வேண்டியதே ஆசிரியர் கடமை. அறிவு வளர்ச்சிக்கு ஏற்றது. சட்டத்திற்கு அஞ்சிப்போய் கூறுவரேல், மாணவர்களைத்தவறான வழியில் நடத்திச் சென்ற குற்றத்தைப் புரிந்தவராவார்." —

## சிங்கப்பூரில் பெரியார் விழா

"வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து நாம் பூர்ணமாக விடுதலை பெறத்தவறினால்நாம்என்றென்றும் பார்ப்பன-பனியா ஆட்சிக்கு அடிமைகளாக வேண்டியது தான். திராவிடநாடு பிரிய வேண்டியது அவசியத்திலும் அவசியம். நாம் பிரிந்து வாழமுடியாது என்று சிலர் கூறுவது வீண் பிதற்றலும், சர்வதேச அரசியல் ஞானமின்மையுமாகும்." என்று செப்டம்பர் 29ந்தேதி மாலை சிங்கப்பூர் விக்டோரிய ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த பேரியார் ஈ.வெ.ராமசாமியின் 69 வதுபிறந்ததினவிழாக் கொண்டாட்டத்தில் தலைமை தாங்கிய தோழர் அ. சி. சுப்பையா கூறினார்.

### தமிழருக்கு அநீதி

இதைத் தொடர்ந்து, படத்திறப்பாளராக 'தமிழ் முரசு' ஆசிரியர் தோழர் கோ. சாரங்கபாணி பேசினார். அவர் பேசினதின் சுருக்கம் வருமாறு:- "தமிழர்களாகிய—திராவிடர்களாகிய நாம் இந்நாட்டிலுள்ள இந்தியர்களில் 90 சதவிகித மிருக்கிறோம். அவ்விதமே சொல்லிக்கொள்கிறோம். நமது சமூகத்தின் பேரில்—நாதியற்ற அநாமதேயப் பேர்வழிகள் பிரதிநிதித்தவம் வகிக்கிறார்கள். இந்தியாவிலும், இங்கும் நம்மீது ஆதிக்கஞ் செலுத்தும் இக்கும்பலுக்கு இனிமேலும் இடங்கொடுக்க முடியாது. நம்மை அவர்கள் ஆட்டி வைப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. இப்பொழுது சமயம் வந்துவிட்டது. நமது பிரதிநிதிகளென்று சொல்லிக்கொண்டு—சுயநலங்கருதிச்சூழ்ச்சி செய்யும்இக்கும்பலை ஒழித்துக்கட்ட வேண்டும்.

தமிழர்களால் நிரப்பப்படாதஎந்த இந்திய ஸ்தாபனமும்இம்மலாயாவில் இந்தியர்களின் பிரதிநிதி ஸ்தாபனமாக முடியாது. அத்தகைய ஸ்தாபனங்கள் தமிழர்களுக்காக-திராவிடர்களுக்காகப் பேசுவதற்கு உரிமையில்லை. —

6-ம் பக்கத் தொடர்ச்சி

எண்ணவில்லையா! மதுரைக்கோயில் பட்டர்கள், கோயிற்கதவைப் பூட்டிக் கொண்டு சாவிகளை ஒளித்து வைத்துவிட்டுத் தாமும் மறைந்து கொண்டால் ஆலயப்பிரவேசம் அடியோடு நின்றுவிடும் என்று எண்ணவில்லையா! அத்தகைய கோமாளித்தனமான முறைகளும் கையாளப்படுவதற்குக் காரணம் யாது? அவர்களின் மன மருட்சிதான் காரணம். புரட்சியின் சக்தி அப்படிப்பட்டது.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுப்பல புதிய கருத்துகளைப் புகுத்திப், புரட்சியைக் கிளப்பிய போது, மருண்டவர் எத்தனை பேர்! மருட்சியின் காரணமாக அவர்கள் ஆடிய ஆட்டமும், போட்ட கூக்குரலும் கையாண்ட இழிவான முறைகளும் கொஞ்சமா!

அதைப்போன்றே "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற புரட்சிக்கீதம் பாடப்பட்டவுடன்,யாராருக்கு மருட்சி ஏற்பட்டது! மருட்சி காரணமாக, கோமாளித்தனமே குறை நீக்கும் மருந்தெனக்கருதும் ஆசாமி முதற் கொண்டு, கோபக்கனலால் எதிர்ப்போரைத் தகித்து விடலாம் எனக் கருதிய காங்கிரஸ் மந்திரிகள் வரையிலே, என்னென்ன பேசினார்கள்! புரட்சி,அவ்விதமாகவெல்லாம், அவர்கள் மனதை மருட்டிவிட்டது.

பிரசாரகரோ, பத்திரிகையோ நாட்டிலே இவர்கள் மீதுஎழுந்துள்ள எதிர்ப்பையே எடுத்துக்காட்டி வருகின்றனர். இவர்களாக எதிர்ப்பை உற்பத்தி செய்வதில்லை. எதிர்ப்பை எழுப்புவது, ஆட்சி முறைகளின் விளைவுகள். அவர்களின் போக்கு, பேச்சு, புதிய சட்டங்கள், புதுப்புது வரிகள். இவைகள் நாட்டிலே அதிருப்தியைவெறுப்பைக்,கொதிப்பைக் கிளப்பி, எதிர்ப்பு என உருண்டு திரண்டு வருகிறது. அந்த எதிர்ப்பு என்ற 'ஜ்வாலையின்' பொறிகளைத் தாங்கி வருவன பத்திரிகைகள், பிரசாரங்கள். பொறிகளை அணைத்துவிடுவது ஜ்வாலையை அணைத்ததாகாது.

"உண்மையைக் கேள், குழந்தாய்! ஜ்வாலை விட்டு எரியும் பெருந் தீயிலிருந்து நான்கு பக்கமும் பொறிகள் பறந்து செல்வது போல்" என்று உப நிஷத்தில் ஒரு இடத்தில் வருவதாகக் கூறுகிறார்கள்.

பொறிகளைக் கண்டு மருண்டு அவைகளை அழித்து விட்டால் பயனில்லை.'ஜ்வாலை' இருக்கிறது! பொறிகளை, எண்ணற்ற பொறிகளை எடுத்து எடுத்து வீச!

எனவே, மருட்சி கொண்டவர் செயல் ஒருபோதும் புரட்சியை அடக்கிவிடாது என்பதை ஆட்சி செலுத்துவோருக்கு நாம் எடுத்துக் காட்டுகிறோம். ❀

## திருமண அழைப்பு

காரைக்குடித் தோழர்கள் R. M. பழனியப்பன்—நாச்சம்மை வாழ்க்கை ஒப்பந்தம் 27-10-47—ல் காரைக்குடியில்நடிகமணி D.V. நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

# சூட்சமம் இதுதான்!

★

புதிதாக, நமது இயக்கப் பிரச்சினைகளைக் கேள்விப்படும், சில நண்பர்கள், பார்ப்பனர்களை, நாம் அவசியமற்றுக் கண்டிக்கிறோம் என்றும், அவர்கள், சமூகத்திலே மிகமிகச் சிறுபான்மையோராக இருக்கிறார்கள், அப்படியிருக்க, அவர்களை ஏன் 'சதா சர்வகாலமும்' தூற்றிக் கொண்டிருக்க வேண்டும், என்றும் கேட்கிறார்கள்.

இது, நமது இயக்கத்துக்குப் பழைய கேள்வி—மிகமிகப் பழைய கேள்வி. ஆனால், கேட்பவர்களிலே பலர், இயக்கத்துக்குப் புதிய 'வரவு'. எனவே அவர்களின் கேள்வி, உண்மையிலேயே, சந்தேகத்தைப் போக்கிக்கொள்ளக் கேட்கப்படுவதேயாகும். அவர்களின் சந்தேகத்தைப் போக்கவேண்டியது நமது கடமையுமாகும். முதலில் அந்த நண்பர்களுக்குநாம் தெரிவித்துக் கொள்கிறோம், நாம் பார்ப்பனர் என்ற ஆட்களை அவர்களின்வகுப்புக்காரணமாக, விஷமத்துக்காகக், கண்டிக்கிறோம் என்று தயவு செய்து எண்ணிவிட வேண்டாம். நாம் கண்டிப்பது பார்ப்பனியம் எனும் ஒரு முறையை.

அதன் ஆரம்பர்கத்தாக்களாகவும், காவலர்களாகவும், பார்ப்பனர்கள் இருக்கிறார்கள் — பார்ப்பனரல்லாதாரிலே பலர், இதற்கு ஆதரவாளர்களாக உள்ளனர்.

ஆகவே, நமது கண்டனம், பார்ப்பனியத்துக்கேயாகும். இனிப், பார்ப்பனர், மிகச் சிறுபான்மைதானே, அவர்களைக்கண்டிக்க வேண்டியதும், அவர்களின் முறையைக் கண்டிக்க வேண்டியதும்அவசியந்தானா, என்று கேட்கப்படுவதைக் கூர்ந்து கவனிப்போம். பிரச்னை, மக்களின்எண்ணிக்கையை மட்டும் கவனித்தால் விளங்காது. அந்தப் பார்ப்பனியம் எனும் முறைக்கு நாட்டிலே உள்ள செல்வாக்கின் அளவே, முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். அப்படிக் கவனித்தால், ஐயர், ஐயங்கார், சர்மா, போன்ற பார்ப்பனர்களோடு இது நின்று விடுவதாக இராமல், பார்ப்பனரல்லாதாரில் பலருக்கும் 'சொந்தமான' பிரச்னையாகி விடக் காணலாம்.

ஒரு முறையைக் கவனிக்கும் போது, அதனை உற்பத்தி செய்த மக்களின் எண்ணிக்கையை மட்டும் கவனிப்பது போதாது — அந்த முறைக்கு நாட்டிலே ஏற்பட்டுள்ள செல்வாக்கின் அளவே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். அப்போது அந்தப் பிரச்னையின் முழு உருவமும் தெரியும்.

பார்ப்பனரிடம் ஏனய்யா பயம்! அவர்களைக் கண்டு பொறாமை எதற்கு? அவர்கள் 100-க்கு 3 பேர் தானே! நீங்கள் 100-க்கு 97 பேரன்றோ! [மைனாரிடி] சிறுபான்மைச் சமூகத்திடம் பெரும்பாலான சமூகம் ஏன் பயங்கொண்டு, பாதுகாப்புக கோரவேண்டும் என்று அடிக்கடி தேசியத் தோழர்கள் கேட்பதுண்டு. அப்படிக் கேட்கும் போதெல்லாம், தங்கள் அறிவின் திறத்தைத் தாமே மெச்சிக் கொள்வர் அத்தோழர்கள்.

சமூகத்தைக் கவனித்தால், டார்ப்பனர் சிறு தொகையினர். பார்ப்பனரல்லாதாரின் மூச்சு, பார்ப்பனரைத் திணறவைக்கும் அவ்வளவு அதிக எண்ணிக்கையுள்ளவர்கள்தான் பார்ப்பனரல்லாதார். ஆனால், பார்ப்பனியம் எண்ணிக்கையைப்பொறுத்ததல்ல! இதுவரை அதற்குப் பலவழிகளிலும் தரப்பட்ட படை பலத்தைப் பொறுத்திருக்கிறது.

ஊரே அஞ்சும்படியான வீரர்தான், ஆனால் அவன் மயங்கும் வேளையிலே, மந்திரக்காரன் கையிலுள்ள சிறு வேப்பிலைக் கொத்துக்கு அஞ்சுகிறான். அந்த இலைக்கும், மந்திரக்காரனுக்கும் இருப்பதாகக் கற்பிக்கப்பட்டிருக்கும் மகத்துவந்தான் வீரனும், அஞ்சும்படியான நிலையை உண்டாக்குவதற்குக்குள்ள காரணமாகும். அதைப்போலப், பார்ப்பனர் சிறு தொகையினராக இருப்பினும், மோட்ச நரகத்திறவுகோலும், ஆண்டவன் அருளை அளக்கும் அளவுகோலும், அவர்களிடம் இருப்பதாகவும், பிற சமூகத்தினரின் சேவையைப் பெறுவது, அவர்களின் பிறப்புரிமை என்றும், அவர்களின் திருப்தி ஆண்டவனுக்கே திருப்தி அளிக்குமென்றும், எண்ணற்ற ஏடுகள்எழுதப்பட்டுப், பன்னெடு நாட்களாக மக்கள் இரத்தத்திலே அந்த எண்ணம் கலக்கப்பட்டு விட்டதால், அந்தச்சமூகத்திற்கு, எண்ணிக்கைக்குத் துளியும் பொருத்தமில்லாத அளவு, அமோகமான செல்வாக்கு வளர மார்க்கம் ஏற்பட்டிருக்கிறது.

கடிவாளம் சிறியது, ஆனால் குதிரை அதனிடம் படும்பாடு யாவரும் அறிந்ததுதான்! மூக்கணாங் கயிறு தனது வால் பருமன் கூடத் தான் இல்லை. ஆனால் மாடு அதனிடம் அகப்பட்டால் அடங்கித்தான் விடும்! அதைப்போலச், சிறிய சமூகமாயினும், அதற்கு ஏதேதோ மகத்துவத்தைக் கற்பித்துவிட்டால், பிறகு அந்தச் சமூகத்தவரின் செல்வாக்கு நிச்சயம் வளரும். ஊரின் மீது ஒரு ஆகாய விமானம் வட்டமிட்டால், 9000 பேர் இருப்பினும் ஊரார் அஞ்சுகின்றனர். ஏன்? ஆகாய விமானத்திலிருந்து வெடிகுண்டு வீசப்படும் என்று தெரிந்ததால். இதனால்தான், பார்ப்பனியம் எனும் பிரச்னை, கண்டிக்கப்பட வேண்டியதாகிறது.

"பார்ப்பனர்களை ஏனய்யா கண்டிக்கவேண்டும்?" என்று, எத்தனையோ பார்ப்பனரல்லாதாரைக் கேட்கச் செய்யும் அளவு, அந்த பார்ப்பனியத்துக்குச் 'சக்தி, ஏற்பட்டிருக்கிறதல்லவா? பார்ப்பனியத்தைக் கண்டிக்கும்போது, அனந்தாச்சாரிகள் கூடச் சும்மா இருப்பர், அவனாசிகளல்லவா, ஆத்திரப்படுகின்றனர் ஏன்? அதுதான் சூட்சமம். மிகமிகச் சிறுபான்மையோராக இருப்பினும், அவர்களின் முறை, அவ்வளவு பரவிச், செல்வாக்குப் பெற்றிருக்கிறது. எனவேதான், நமது இயக்கம், அந்தப் பிரச்னையை முக்கியமானதாகக் கருதுகிறது. இதுவரையிலே, பார்ப்பனியத்துக்கு, நாம் உண்டாக்கிய எதிர்ப்புக்கு, மறுப்பும், எதிர்ப்பும், பார்ப்பனரிடமிருந்து கிளம்பியதைவிட, நம்மவர்களிடமிருந்தே அதிகம் கிளம்பிற்று. அவ்வளவு சக்தி வாய்ந்த ஒரு முறையைக் கண்டிப்பது, வீண் வேலையாகுமா? அந்த அளவு செல்வாக்குடன் உள்ள ஒரு முறையை, எதிர்க்க, நாம் துணிவுடன் பணியாற்றுவது, அவசியமற்றதாகுமா என்பதைக், கேள்வி கேட்கும் நண்பர்கள், சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

*

# ஒற்றுமை :: ஏன் இல்லை?

—⊛—

எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற உணர்ச்சி வேண்டும். மதம் வேறாக இருப்பின் என்ன? எத்தனை பேதங்கள் தான் இருந்தால் என்ன? எல்லோரும் இந்நாட்டவர் என்றால் உடனே ஒரு ஒற்றுமை, ஒருவித பந்தத்துவம் உண்டாகி விடுமே என்றும், "நாம்யாவரும் இந்தியர் என்ற ஒரே இனத்தவர்" என்றும் பேசுவதில் காங்கரசார் துளியும் தயங்குவதில்லை. ஆனால் இது பேச்சளவில் தான் உளது. காரியத்திலோ கொடுமைகளே நடக்கக் காண்கிறோம்.

60-ஆண்டுகளுக்கு மேலாகஓயாது நாட்டு ஒற்றுமையைப் பேசிப் பேசிப் பார்த்தாகி விட்டது.

பாரத நாடு, பாரததேவி, ஜென்ம பூமி என்று கூறிப் பார்த்தாகி விட்டது.

ஜாதி மதங்களைப் பாரோம்,
உயர்ஜென்ம மித்தேசத்தில்
எய்தினராயின்,
வேதியர் ஆயினும் ஒன்றே,
அன்றி வேறு குலத்தவர்
ஆயினும் நன்றே.

எனப்பாரதிபாடிட, அதனைத்தேசியத் தோழர்கள் தேர்தலில் பாடி, ஓட்டுகளை வாங்கியும் விட்டனர்.

ஆனால் தலைவர்கள்தேடிய, தொண்டர்கள்கூறிய, கவிகள் பாடிய, காவியங்கள் காட்டிய, ஒற்றுமை எங்கே? நாட்டிலே, அது காணப்படுகிறதா? எல்லோரும் ஒன்று என்ற எண்ணம் நிலைத்து நின்று நடவடிக்கையில் காட்டப்படுகிறதா? எங்கே ஒற்றுமை?

இல்லை! எங்கும் காணப்படவில்லை. அது ஏட்டுச் சுரையாயிற்று.

## ஒற்றுமை எந்த அளவிலிருக்கிறது?

அறுபதாண்டு பேசியபிறகு ஆயிரமாயிரம் மேடைகளில் அதிர்வெடிப் பிரசாரம் நடந்தபிறகு, ஆத்மாக்களுக்கு மேற்பட்ட மகாத்மா இருபது ஆண்டுகளுக்கு மேல் பாடுபட்ட பிறகு, ஒற்றுமை எந்த அளவில் இருக்கிறது என்றால், பாலைவனத்தில் நடந்து செல்பவன் தாகமேலீட்டால் வாடி வருந்தித் தேடிப்பார்க்க அவன்கண்முன்தொலைவில் பச்சைப் பசேலென ஓரிடமும் அதன் பக்கத்திலே பால்நிற நீரும் இருப்பது போலத் தோற்றிட, ஆவலுடன் தாகவிடாய் தீர்த்துக்கொள்வோம் என்று அவன் ஓடோடி அதனருகேசென்றுபார்க்க, அதுவெறும் கானல் நீர் எனக்கண்டு கலங்குவது போன்றாகி விட்டது.

சிலையைத் தொலைவிலிருந்துகண்டு சிங்காரி எனஎண்ணி ஏமாறுவது போலும், அக்கரை பச்சையாக இருக்கிறதென இக்கரையிலிருந்து எண்ணுவது போலவும், சருகு உதிர்ந்திருக்க அதனை மலர் என மயக்கத்தால் எண்ணி ஏமாந்தது போலவும் முடிந்ததே யொழிய, பேசிய, தேடிய ஒற்றுமை கண்ணில் படவில்லை. காரியத்தில் காட்டப்படவில்லை. ஏன்?

மக்களுக்குள் ஒற்றுமை வளரும் விதத்தில் பேசவில்லையா! இந்நாட்டில் பேசப்பட்டதுபோல ஒற்றுமை முழக்கம் வேறு எந்த நாட்டிலும் பேசப்படவில்லை என்றும் கூறலாம். அவ்வளவு அதிகமாகப்பேசி யிருக்கிறார்கள் ஒற்றுமை விஷயமாக.

நெஞ்சை அள்ளும் சொற்பொழிவுகள், நிகழ்த்தப்பட்டன. இராமன் ஆண்டநாடு, பரதன் பரிபாலித்த தேசம். விண்ணை முட்டும் இமயம் என்ன? கண்ணை மருட்டும் கனவாய்கள் எவ்வளவு! சுற்றிச் சுருண்டு ஓடும் அழகுள்ள ஆறுகள் எவ்வளவு! கங்கை, காவிரி, கோதாவரி இல்லையா! என்று எழுச்சி எழப் பேசப்பட்டது.

முப்பத்துமுக்கோடி மக்களை ஈன்ற பாரத அன்னை! நாலுவேதம் ஆறு சாத்திரம், அறுபத்திநாலு கலைக்கியானம் தந்த பாரத அன்னை—என்று உணர்ச்சியை ஊட்ட வீர உரைகள் பேசியாகி விட்டது, இவ்வளவுக்குப் பிறகும் ஒற்றுமை இல்லை. ஏன்?

இவ்வளவு தலைவர்கள் ஒற்றுமைக் கீதம் பாடியும் காட்டிலிட்ட கூச்சல் போலப், பயனற்றுப் போனதற்குக் காரணம் என்ன?

பண்டைப் பெருமைகளைப் பேசியும் ஆண்டவனின்பலவிதகதைகளைக் கூறியும் அசோகர், சிவாஜி, கனிஷ்கர் சந்திரகுப்தர் என்று சக்ரவர்த்திளின் பெயரைச்சாட்சிக்கு அழைத்தும், ரிஷிகள், யோகிகள், தபோதனர்கள், கடவுளவதாரங்கள், மகாத்மாக்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ஆகியோரைத் துணைக்கு அழைத்தும், ஒற்றுமை உண்டாகாமற் போனதன் காரணம் என்ன?

தாய்மொழியும் பிறப்பும் ஒற்றுமையை உண்டாக்கும். பிறிதொன்றும் உண்டாக்காது. தாய்மொழியும் பிறப்பும் ஒன்று என்ற உணர்ச்சியுமே, ஒரு குல மக்கள் என்ற உணர்வை, ஒற்றுமையைத் தரும். பிற போலி ஒற்றுமையைத், தொட்டால் உதிர்ந்துவிடும்; ஒருவரை ஒருவர் ஏய்க்க மட்டுமே உதவும் ஒற்றுமையை—கவைக்கு உதவாத ஒற்றுமையைத் தான் தரும்.

தம் மொழியை தேவமொழி என்றும், நம்மொழியை நீசமொழி என்றும், தம்மைஉயர்குடிப் பிறப்புப்பூசுரர் என்றும், நம்மைத் தாழ்ந்த பிறப்பு சூத்திரர் என்றும் கருதும், ஆரியருக்கும், தமிழராகிய நமக்கும், இந்தியோ, காந்தியோ, காங்கிரசோ, தேசியமோ, ஒருகாலத்திலும் ஒற்றுமையை உண்டாக்காது!

சுட்டமண் ஒட்டாது. பேய்ச்சுரை கறிக்கு உதவாது. ஊமை பேச முடியாது, குருடன் காண இயலாது.

உண்மையான ஒற்றுமை தமிழ் நாட்டில் தமிழருக்குள் தான் வர முடியும். பிரான்சில் பிரன்சுக்காரருக்குள் வரும், பெல்ஜியத்தில் பெல்ஜியக்காரருக்கு வரும், இத்தாலி நாட்டில் இத்தாலியருக்கு வரும், சிங்கள நாட்டில் சிங்களவருக்கு வரும், ஆரிய நாட்டில் ஆரியருக்கு வரும். ஏன்? அங்கு தாய்மொழியும் பிறப்பும் மக்களை ஒன்று கூட்டி வைக்கிறது.

உண்மை நாட்டு ஒற்றுமை ஏற்பட இந்த மூலக் கொள்கைதான் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இதற்கேற்ப நாடுகள் அமைக்கப்பட்டால், தானாக, ஒற்றுமை மிளிரும்.

இதனை விட்டு விட்டு, வெவ்வேறு தாய்மொழியும், வெவ்வேறு இனப்

பிறப்பும் கொண்டமக்களை, இந்தியா என்ற பட்டியில் போட்டு அடைத்துவிட்டு, நீங்கள் இந்தியர் என்று கூறுவதானால், அது ஏட்டில் இருக்குமே ஒழிய, நாட்டில் நிலைக்காது என்பதை உணர வேண்டுகிறோம்.

அரபு நாட்டுக் கதையொன்றுண்டு! “ஐயனே, தேவனே, தலை சுற்றுகிறது, கைகால்கள் சோர்ந்துவிட்டன. சற்று என்னை இந்தப் பாழும் கொடி வழிதீருமட்டும் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டால்உனக்குக்கோடி புண்ணியம் உண்டு” என்று கெஞ்சினான் ஒரு கிழவன். வழிப்போக்கன் கிழவன் படும் பாட்டைக்கண்டு மனம் இளகி, அவனை முதுகில் சுமந்து சென்றானாம். கொடிவழி தீர்ந்தது. ஆனால் கிழவன் இறங்கியபாடில்லை. சுமந்து சென்றவனைக் கிழவன் மேலும் கொஞ்ச தூரம் போகவேண்டுமென்றான். வழிப்போக்கன் சென்றான். போகப்போக மேலும் மேலும் போகச் சொன்னானேயொழிய, போதுமப்பா, கீழே இறக்கிவிடு என்று கூறவில்லை. கடைசியில், கீழே இறங்கு என்று கூறியபோது, உன்னைவிட்டுப் பிரியமனம் இல்லையே. நான் எப்படிக் கீழே இறங்குவேன். உன்மீது எனக்கு அமோகமான அன்பு உண்டாகிவிட்டது என்று பசப்பினானாம் கிழவன். கிழவனைப் பிறகு கீழே தள்ளிவிட்டு வழிப்போக்கன் நடந்தான்.

இந்தக்கிழவன்போல ஆரியர் பேசுகின்றனர்.

இதுவரையில் எம்மீது ஏறிச் சவாரி செய்து தமிழரின் தோள்வலிமையைத் தொலைத்து மன வலிமையைமாய்த்துவிட்டது போதும். இனி நீ வேண்டாம் எனஆரிய ஆதிக்கத்துக்குஇறுதிப்பேச்சுவிடத்,தமிழர் துணிந்ததும் “ஐயோ! உன்னைவிட்டுப்பிரிய மனம் இல்லையே. நாம் எத்தனை எத்தனை காலமாக ஒன்றாக வாழ்ந்துவந்தோம். இப்போது எப்படிப்பிரிவது” என்று ஆரியம் கேட்கிறது.

“ஆரியர்—திராவிடர் என்றபேதப் பேச்சுப் பேசுதல் அடாது.ஆரியரும் திராவிடரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இங்கு வாழ்ந்து வருகிறோம்” என்று கூறுகின்றனர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆரியரும் திராவிடரும் இங்கு இருப்பது உண்மை. ஆனால் எந்த முறையில்? எவ்விதமான தொடர்போடு? தோழர்களாகவா? இல்லை! சகோதர பாவத்தோடா? கிடையாது! ஆரியர் குருவாகவும் திராவிடர் சீடர்களாகவும், ஆரியர்உயர்சாதியாகவும் திராவிடர் தாழ்ந்த சாதியாகவும்,ஆரியர் கடவுளின்கருணையைக் காசுக்கு விற்பவராகவும், திராவிடர் கடவுளின் கருணையைப்பெற ஆரியன் கால் கழுவி நீர் பருகுபவர்களாகவும், ஆரியர் எஜமானராகவும், திராவிடர் அடிமைகளாகவும் வாழ்ந்து வருகின்றனரேயன்றிக், கலந்துஉள்ளனரா? இரு சாராருக்கும் உள்ள மன பேதங்கள் மாற்றப்பட இதுவரைமுயன்றதுண்டா? உயர் நிலையில் ஆரியர் இருந்து வருகின்றனர். இது கெட்டுவிடுமே, தனிநாடாகப்பிரிந்தால்,என்றுகருதுவதுதான் பிரிவினையை எதிர்ப்பதன் கருத்து. கதையில் வரும் கிழவன், வழிப்போக்கன் முதுகில் சவாரி செய்துவந்ததைப்போலத்தான் தமிழகத்தின்மீது ஆரியம் ஆதிக்கம் செலுத்தி வந்ததேயொழிய, இரண்டறக் கலக்கவோ, இதமான தோழமை கொள்ளவோ இல்லை.

எனவே பிரியவேண்டுமென்று சொல்வது, தோழர்களிடமிருந்து அல்ல, நமது தோட்களை நெறிக்கும் சுமையினின்றும் பிரியவேண்டுமென்கிறோம். தமிழகம் சூதுக்கும் சூழ்ச்சிக்கும் சுமைதாங்கியாக இருந்த காலம் போதும்! பட்டது போதும்! இனிப்படமுடியாது! என்கிறோம்.

நமது கொல்லையில் காளை புகுந்து மேயக்கண்டு தூரத்தினின்றும் அதனைத்துரத்தினால் அதுமெல்ல மேய்வதைவிட்டு அவசர, அவசரமாக பயிரை அழிக்கும். கிட்டே வந்து குறுந்தடி எடுப்பின் ஓடுமுன்னம் முட்டவரும். பிறகு ஓடினாலும் நாம் ஓய்ந்த வேளையில் கொல்லையின் உள்ளே புகும். ஆனால் கொல்லைக்கு வேலி கட்டிவிட்டால், காளைக்கு வேலை இராது. பயிர் மிஞ்சும். இதுதான் தமிழகத்தைத் தனியாகக் காணவேண்டுமென நாம் கேட்பதன்காரணம்.

ஆழ உழுகிறான்! விதைபோட்டு, நீர்பாய்ச்சிக், களைஎடுத்து! பச்சைப் பசேலென நிலமுழுதும் நெற்பயிரைக் காண்கிறான். முற்றுகிறது. தான் பட்ட கஷ்டத்தின் பலனாகச், செந்நெல் சிறக்க உள்ளது என சிந்தை மகிழும் நேரத்திலே, அறுவடைச் சமயத்தை எதிர்நோக்கி நிற்கும் வேளையிலே, வயல் ஓரத்தில் நின்றிருந்தவன், அரிவாள்கொண்டு, முற்றிய பயிரை அறுத்தெடுத்துச் செல்லவரின், உழுது பயிரிட்டவன் உள்ளம் என்னாகும்?

அவன் வெறும் பண்ணையாளாக இருப்பின், சிறிதளவு நெல்பெற்று வீடுசெல்வான். அவன் உழைத்தது, அவ்விதமல்ல. கூட்டுப் பண்ணையில் வேலை செய்வதாகவே கருதிவந்தான். ஆனால் உழைப்புக்கு அவன் உதவினானே தவிர பலன் அவனுக்குச் செல்லவில்லை.

இந்நிலையிலுள்ள திராவிட இன மக்கள், இன்று, எந்த ஆரியம் தங்களை அழுத்துகிறதோ, உழைக்கச் செய்து உருக்குலைய வைக்கிறதோ, அந்த ஆரியப், ஒற்றுமைக்குக் கேடு செய்கிறது, வாழ்வை வேதனைப் படுத்துகிறது, எனவே அந்த முறை முறியடிக்கப்பட வேண்டும் என்று முழக்கமிடுகிறார்கள். கோபித்துப் பயன் இல்லை! குறைதீர, வழிஎன்ன? அதை யோசித்துப் பார்க்க வேண்டும். வெறும் இனிப்புப் பேச்சுப் போதாது. இதெல்லாம் கற்பனை! மனப் பிராந்தி! நல்ல மனதிலே கலக்கப்படும் நஞ்சு! என்றெல்லாம் பேசிப் பயனில்லை. பன்னெடுங்காலமாக இங்கு ஒற்றுமையை வரவொட்டாது தடுத்து வந்த, ஆரிய முறை ஒழிக்கப்பட்டாக வேண்டும்

கொடுங்கோல் மன்னன் ஒருவன் ஒரு பெரியாரைக் கூப்பிட்டு “எனக்காக நீ ஏதாவது ஒரு பிரார்த்தனை செய்” என்றான்.

(2-ம் பக்கம் பார்க்க)

விற்பனை

நடுத்தரமான ஏழு (7) சயிக்கில் சாமான்கள் விற்பனைக்காக உள்ளன. கீழ்உள்ள விலாசத்திற்கு எழுதவும்.

A. M. மாணிக்கம்
மில்ட்டரி ஓட்டல், ரங்கசாமி குளம்,
சி. காஞ்சிபுரம்.

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press.
817—819 Hodgsonpet Conjeeveram.